வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

பக்கங்கள் : 16

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

06.02.2021 சனிக்கிழமை




# ஐ.நாவின் தலையீட்டுடன் இலங்கையில் சுயாதீன பொறுப்புக்கூறல் பொறிமுறை!

## ஐ.நா. நிபுணர் குழுக்கள் கூட்டாக பரிந்துரை

ஜெனிவா, பெப்ரவரி 06

இலங்கை தொடர்பில் ஐ.நாவின் தலையீட்டுடன், ஒரு பக்கச்சார்பற்ற மற்றும் சுயாதீனமான சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையை நிறுவவேண்டும் என ஐ.நா. நிபுணர் குழுக்கள் கூட்டாகப் பரிந்துரைத்துள்ளன.

02

## வடக்கில் நேற்றும் 8 பேருக்கு தொற்று

### 7 பேர் மன்னாரில் அடையாளம்

யாழ்ப்பாணம், பெப். 06

வடக்கு மாகாணத்தில் மேலும் 8 பேருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் 6 பேர் மன்னாரில் அண்மை

02



## பேரணியில் பங்கேற்றோர் முள்ளிவாய்க்காலில் அஞ்சலி

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மாபெரும் பேரணி முள்ளிவாய்க்கால் நினைவிடத்தை நேற்று மாலை வந்தடைந்தது.

அங்கு இறுதிப் போரில் உயிரிழந்த மக்களுக்கு நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. தமிழர்களின் உரிமையை கோரி பொத்துவிலில் ஆரம்பிக்கப் பட்டபேரணி, நீதிமன்றம், பொலிஸார் மற்றும் அதிரடிப்படையினரின் பல தடைகளையும் தாண்டி முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (அ-எ)

## பேரணிக்கு விதித்த தடையை நீக்கி யாழ். நீதிமன்றம் அதிரடி உத்தரவு!

யாழ்ப்பாணம்,பெப்.06

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான அஹிம்சை வழிப்போராட்டம் இடம்பெற்று வரும் நிலையில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் இன்றுவரை ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை நடத்த வழங்கிய தடை உத்தரவை நீதிமன்றம் நீக்கியுள்ளது.

பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு ஒருமுக விளக்கத்தில் வழங்கிய கட்டளையை பிரதி வாதிகள் முன்வைத்த ஆட்சேபனையை அடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்

02

## தாக்குதலுக்கு உள்ளான குடும்பஸ்தர் உயிரிழப்பு

### கொலை வழக்குப் பதிவு செய்தனர் யாழ்.பொலிஸார்

யாழ்ப்பாணம், பெப். 06

தாக்குதலுக்கு உள்ளாகி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குடும்பத் தலைவர் சிகிச்சை

02

## தமிழர்களின் நீதிக்கான பேரணிக்கு வீதியில் ஆணிகள் வைத்து அராஜகம்!

திருகோணமலை,பெப்.06

திருகோணமலையிலிருந்து நேற்றுக்காலை ஆரம்பமான பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில் மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தப் பேரணி நேற்றுக் காலை திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணத்தை ஆரம்பித்த நிலையில் வீதியில் ஆணிவைத்து மேற்கொள்ளப்பட்ட சதி நடவடிக்கையில் பேரணியில் பயணித்த எட்டு வாகனங்கள் காற்றுப்போயுள்ளன.

புல்மோட்டையை அண்மித்த பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதனையடுத்து அந்தப் பகுதியில் வீதியை அவதானித்தபோது வீதியில் அதிகளவான ஆணிகள் இறுக்கப்பட்ட நிலை

02

## இலங்கையில் நீதிக்கான குரலை பிரான்ஸ் உரக்க எழுப்ப வேண்டும்!

### அந்நாட்டு எம்.பி. டுவிட்டர் பதிவு




பாரிஸ், பெப். 06

இலங்கையில் நீதிக்கும் சமாதானத்துக்குமான தனது குரலை பிரான்ஸ் ஐ. நா. மனித உரிமைகள் சபையில் உரத்து எழுப்ப வேண்டும்.

இவ்வாறு பிரான்ஸின் பாராளுமன்ற உறுப்பினர் செபஸ்ரியன் நடோ தனது டுவிட்டர் பதிவில்

02




### பொத்துவில் முதல் பொலிகண்டி வரை பேரணி

## பொலிஸாரின் தடை உத்தரவு கோரும் விண்ணப்பம் சாவகச்சேரி, மல்லாகம் நீதிமன்றங்களால் நிராகரிப்பு

சாவகச்சேரி, பெப். 06

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான அஹிம்சை வழிப் போராட்டம் இடம்பெற்று வரும் நிலையில் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை நடத்தத் தடை உத்தரவு கோரி பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பம் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

02

## தடைகளை தகர்த்து முன்னேறி வடக்கு வந்து சேர்ந்தது பேரணி!

முல்லைத்தீவு, பெப். 06

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மாபெரும் பேரணி முல்லைத் தீவில் இருந்து ஒட்டுசுட்டான் நோக்கி நகர்கின்றது.

அம்பாறை பொத்துவிலிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை வலியுறுத்தும் மாபெரும் பேரணி நேற்று மூன்றாவது நாளில் திருகோண

02

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## ஐ.நாவின்...

அத்துடன், சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறை உட்பட இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கான அனைத்து வழிமுறைகளையும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மற்றும் அதன் உறுப்பு நாடுகள் ஆராய வேண்டும் எனவும் ஐக்கியநாடுகள் நிபுணர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

2015 முதல் 2019 வரை இலங்கைக்கு மேற்கொண்ட 10 உத்தியோகபூர்வ விஜயங்களின்போது அவதானித்த விடயங்களைக் கொண்டு ஐ.நா. சுயாதீன நிபுணர் குழுவினர் கூட்டாக இந்தப் பரிந்துரைகளை நேற்று முன்வைத்துள்ளனர்.

இலங்கையில் கடுமையாக போராட்டங்களின் மத்தியில் சமீபத்திய ஆண்டுகளில் ஜனநாயக கட்டமைப்புக்களை கட்டியெழும்புவதில் முன்னேற்றம் ஏற்பட்டிருந்த நிலையில் தற்போது மீண்டும் பழைய நிலைக்கே திரும்பும் இலங்கையின் போக்கு நிறுத்தப்படவேண்டும் என ஐ.நா. மனித உரிமை வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த கால குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க வேண்டும். அத்துடன் சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஊக்குவிக்க வேண்டும் என்றும் இலங்கைய ஐ.நா. மனித உரிமை வல்லுநர்கள் குழு வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் கடந்த கால குற்றங்கள் தொடர்பில் சுயாதீனமான கண்காணிப்பை அதிகரிப்பதற்கும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கும் மனித உரிமைகள் பேரவையின் முயற்சிகளைத் தொடருமாறு அவர்கள் அழைப்பு விடுத்தனர்

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகளை மேம்படுத்தும் விடயங்களில் இலங்கை தோல்வி கண்டுள்ளது.

அதேவேளை, குடிப்பரம்பலை மாற்றியமைத்தல், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான முக்கியமான அமைப்புக்களை பாதுகாக்க தவறுதல், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளரால் இலங்கை தொடர்பில் எழுப்பப்பட்ட பிரச்னைகள் கவனத்தில் கொள்ளாமை உள்ளிட்ட இலங்கையில் வளர்ந்து வரும் எதிர்மறையான போக்குகள் குறித்து நாங்கள் திகைப்படைந்துள்ளோம் என அறிக்கையில் ஐ.நா. மனித உரிமை வல்லுநர்கள் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிறுபான்மையினரை அச்சுறுத்தும் வகையில் அரசாங்கத்தின் பெரும்பான்மைச் சொல்லாட்சி அமைந்துள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஏப்ரல் 2019 இல் நடந்த உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் மற்றும் கோவிட்-19 தொற்றுநோய் ஆகியவை நாட்டிற்கு பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளன.

ஆயினும் இந்த நெருக்கடிகளுக்கு மத்தியில் சிவில் செயற்பாடுகளை இராணுவமயமாக்கும்போக்கு அதிகரித்துள்ளது. அத்துடன், சிவில் சமூகப் பணிகளில் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னார் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளமை ஆபத்தானது என நிபுணர்கள் தெரிவித்தனர்.

இலங்கை அரசமைப்பில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட20ஆவது திருத்தம் உள்ளிட்ட அரசின் செயற்பாடுகள் இலங்கையின் சுயாதீன அமைப்புக்கள் மற்றும் நீதித்துறையின் சுயாதீனத் தன்மைக்கு அச்சுறுத்தலாகியுள்ளன. ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு அவசியமான அமைப்புக்களின் சுயாதீன தன்மை கேள்விக்குறியாகியுள்ளது.

நிலைபேறான அபிவிருத்திக்கான இலக்குகளை இலங்கை அரசாங்கம் தனது நிகழ்ச்சி நிரலில் முன்வைத்துள்ளது. இருப்பினும் வெளிப்படையான, பயனுள்ள மற்றும் பொறுப்புணர்வு கொண்ட நிறுவனங்கள் இல்லாமல் வறுமையை முடிவுக்குக் கொண்டுவருதல், கல்வி அபிவிருத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல் போன்ற குறிக்கோள்களை முழுமையாக அடைய முடியாதுஎனவும் வல்லுனர் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

## வடக்கில்...

யில் கோரோனா தொற்றுள்ளவர்களுடன் தொடர்புடையவர்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

“யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் மருத்துவ பீட ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 687 பேரின் மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன. 8 பேருக்கு கோரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களில் 5 பேர் மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் ஏற்கனவே கோரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்புடையவர்கள். அதனால் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டபோதே தோற்று உள்ளமை நேற்று கண்டறியபட்டுள்ளது.

நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியபட்டுள்ளது. அவருடன் கோரோனா தொற்றாளருடன் தொடர்புடையவர்.

அத்துடன் மன்னாரில் சீரமைப்புப் பணியில் ஈடுபட்டு வரும் ஒருவர் மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று அன்ரிஜென் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

வவுனியா வைத்தியாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. அவர் வவுனியா பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்” என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் கூறினார்.

## தமிழர்களின்...

யில் காணப்பட்டுள்ளன.

இந்நிலையில் பேரணியில் பங்கேற்ற இளைஞர்கள் வீதியில் இறுக்கப்பட்ட ஆணிகளை அகற்றி பேரணியைத் தொடர்ந்தனர்.

இதேவேளை, நேற்றுக் காலை பேரணி ஆரம்பிக்கப்பட்டபோது எம்.கே.சிவாஜிலிங்கத்தின் வாகனம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. (எ)

(இதுதொடர்பான விரிவான செய்தி உள்ளே)

## பொலிஸாரின்...

அத்துடன் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் சுன்னாகம், காங்கேசன்துறை மற்றும் அச்சுவேலி பொலிஸார் முன்வைத்த விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பங்களே இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளன.

பொதுத் தொல்லையை ஏற்படுத்தல், கொரோனா சுகாதார நடைமுறைகளை மீறுதல் உள்ளிட்ட சட்ட ஏற்பாடுகளின் கீழ் இந்த விண்ணப்பங்கள் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டன.

ஜெனிவா மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் இடம்பெறவுள்ள நிலையில் நாட்டுக்கு களங்கம் ஏற்படுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் முயற்சிக்கின்றனர் என்று பொலிஸார் நீதிமன்றில் எடுத்துரைத்தனர்.

இதேவேளை, இலங்கை அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள ஒன்றுகூடும் உரிமையை பொலிஸாரின் தடை உத்தரவு கோரிக்கை மறுக்கின்றது.

அத்துடன் ஒரு இனம் நாட்டுக்கு சதி செய்வதாக பொலிஸார் காண்பிக்க முயற்சிப்பது ஏனைய இனங்களுக்கு வெறுப்புணர்வைத் தூண்டும்.

பேரணி இடம்பெறும் இடங்கள் தனிமைப்படுத்தப்படவில்லை. அதனால் பொலிஸார் தாக்கல் செய்த அடிப்படையற்ற விண்ணப்பத்தை நிராகரிக்கவேண்டும் என்று சட்டத்தரணி கேசவன் சயந்தன் நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

இருதரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த சாவகச்சேரி நீதிவான், பொலிஸாரின் தடை உத்தரவு கோரிக்கையை நிராகரித்து உத்தரவிட்டார்.

இதேபோன்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் சுன்னாகம், காங்கேசன்துறை மற்றும் அச்சுவேலி பொலிஸார் தாக்கல் செய்த பேரணிக்கான தடை உத்தரவு விண்ணப்பங்கள் நேற்று விசாரணைக்கு வந்தன.

சிரேஷ்ட சட்டத்தரணிகள் என்.ஸ்ரீகாந்தா, வி.திருக்குமரன் மற்றும் சட்டத்தரணிகள் முன்னிலையாகி ஆட்சேபனை தெரிவித்து நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தனர்.

பொலிஸாரின் விண்ணப்பம், சட்டத்தரணிகளின் ஆட்சேபனையை ஆராய்ந்த மல்லாகம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா பொலிஸாரின் விண்ணப்பங்களை நிராகரித்து கட்டளை வழங்கினார்.

(அ-எ-2-3)

## பேரணிக்கு...

றம் நீக்கியது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பத்துக்கு கடந்த புதன்கிழமை தடை உத்தரவு வழங்கப்பட்டது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், சட்டத்தரணி க.சுகாஷ், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், வேலன் சுவாமிகள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரநிதிகள் உள்ளிட்டோருக்கு இந்தத் தடை உத்தரவு வழங்கப்பட்டது.

பொதுத் தொல்லையை ஏற்படுத்தல், கொரோனா சுகாதார நடைமுறைகளை மீறுதல் உள்ளிட்ட சட்ட ஏற்பாடுகளின் கீழ் இந்த விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரால் தனித்தனியே தாக்கல் செய்யப்பட்டன.

அத்துடன் ஜெனிவா மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் இடம்பெறவுள்ள நிலையில் நாட்டுக்குக் களங்கம் ஏற்படுத்தும் முயற்சியில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர் எனப் பொலிஸார் நீதிமன்றில் எடுத்துரைத்தனர்.

இதனடிப்படையில் பிரதிவாதிகள் முன்னிலையாகாத நிலையில் தடை உத்தரவை நீதிமன்றம் வழங்கியது. இதையடுத்து நேற்று இந்தத் தடை உத்தரவு வழக்குகள் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் விசாரணைக்கு வந்தன. சட்டத்தரணிகள் வி.மணிவண்ணன், வி.திருக்குமரன் உள்ளிட்டோர் முன்னிலையாகி கடும் ஆட்சேபனையை முன்வைத்தனர்.

இதனால் ஒருமுகக் கட்டளையாக வழங்கப்பட்ட தடை உத்தரவை நீக்கிய நீதிமன்றம் கொரோனா நோய்த்தொற்று, சுகாதார நடைமுறைகள் மீறப்பட்டால் அதன் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாரை அறிவுறுத்தியுள்ளது. (அ-எ)

## தடைகளை...

மலையிலிருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணித்தது.

இந்நிலையில் இடையில் சிறு தாக்குதலுக்கு உள்ளான பேரணி முல்லைத் தீவைச் வந்தடைந்து பின்னர் முள்ளிவாய்க்கால் நினைவிடத்துக்குச் சென்றது.

அங்கு இறுதிப் போரில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்பின்னர் அங்கிருந்து ஆரம்பிக்கப்பட்ட பேரணி புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், கிளிநொச்சி ஊடாக வவுனியா நோக்கிப் பயணத்தை மேற்கொண்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சிவில் சமூக அமைப்புக்கள், தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து இந்தப் பேரணியை முன்னெடுத்து வருகின்றன.

இந்நிலையில் பேரெழுச்சிப் பேரணியானது கிளிநொச்சி, வவுனியா சென்று மன்னார் ஊடாக நாளை ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் பொலிகண்டியில் நிறைவடையவுள்ளது. (அ-எ)

## தாக்குதலுக்கு...

பயனின்றி உயிரிழந்துள்ளார்.

அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் பி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். யாழ்ப்பாணம் ஆசீர்வாதப்பர் வீதியைச் சேர்ந்த சதாசிவம் நந்தகுமார் (வயது-48) என்ற குடும்பத்தலைவரே உயிரிழந்தார்.

அவர் கடந்த முதலாம் திகதி வெளியில் சென்றிருந்ததாகவும் பின்னர் தாக்குதலுக்கு உள்ளாகிய நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அன்றைய தினமே சேர்க்கப்பட்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 5 நாள்களாக சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று அதிகாலை உயிரிழந்தார் என்றும் விசாரணையில் கூறப்பட்டது.

சம்பவம் தொடர்பில் வைத்தியசாலைக்குச் சென்று இறப்பு விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.பீற்றர் போல், உடற்கூற்றுப் பரிசோதனையின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

அத்துடன் இறப்பு விசாரணை வரும் 9ஆம் திகதி நீதிமன்றில் இடம்பெறும் என்றும் நீதிவான் தவணையிட்டார்.

## இலங்கையில்...

கேட்டிருக்கிறார்.அதிபர் மக்ரோனின் கட்சி சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி இருந்த அவர் தற்சமயம் சூழலியல் கட்சி ஒன்றில் இயங்கி வருகிறார்.

தமிழ் இளையோரால் ஆரம்பிக்கப்பட்ட #Genocide SriLanka டுவிட்டர் இடுகுறிப் பிரசாரத்தில் அவர் இலங்கையின் சுதந்திர தினம் குறித்த தனது கருத்தைப் பகிர்ந்துள்ளார்.

”இலங்கை அதன் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதில் ஓர் உயர்ந்த அர்த்தம் இருக்க வேண்டும். அங்கு தமிழர்கள் அனுபவித்த துன்பங்களின் தலைவிதி அதன் சுதந்திரக் கொண்டாட்டத்தைப் பெறுமானம் இழக்கச் செய்துவிட்டது” - என்று தனது பதிவில் அவர் எழுதியிருக்கிறார்.

இலங்கைத் தமிழர் விடயத்தில் பிரான்ஸின் வெளிவிவகார அமைச்சரிடம் தான் எழுத்து மூலம் எழுப்பியுள்ள கேள்வி தொடர்பான பாராளு மன்ற ஆவணம் ஒன்றையும் அவர் தனது டுவிட்டர் பதிவில் இணைத்துள்ளார். “இலங்கை விடயத்தில் பிரான்ஸ் தொடர்ந்து மௌனம் காத்து வருகிறது” என்று அதில் செபஸ்ரியன் நடோ எம்.பி குறிப்பிட்டுள்ளார்.

ஐ. நா. மனித உரிமைகள் சபையில் 2021/2023 காலப் பகுதிக்கான பிரான்ஸின் பிரசன்னத்தைச் சுட்டிக் காட்டியிருக்கின்ற அவர், மனித உரிமைப் பெறுமானங்களை மேம்படுத்தும் நோக்கில் இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் பிரான்ஸ் எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கப்போகிறது என்று கேள்வி எழுப்பி உள்ளார்.

## பௌத்த...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றுமொரு தமிழ் அரசியல் பிரமுகரே முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ் மன் கதிர்காமர். காலஞ்சென்ற லக்ஷ்மன் கதிர்காமர் வெளிவிவகார அமைச்சராக இருந்தபோது, 1999ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம், வெசாக் பண்டிகையை ஒரு சர்வதேச தினமாக பிரகடனப்படுத்த வைத்திருந்தார் என்பதையும் இங்கே சுட்டிக் காட்டவேண்டியது அவசியமாகும்.

பௌத்தமதம் என்பது ஒரு வாழ்க்கை தத்துவமாகும். புத்தபகவான் பௌத்த மத போதனைகளை முழுமானிட குலத்திற்குமே போதித்திருந்தார். ஆனால், பௌத்தமதம் ஏதோ சிங்களவர்களுக்கு மாத்திரமே உரியதென்றும், இலங்கை மட்டுமே உலகிலுள்ள ஒரேயொரு பௌத்த நாடு என்றும் ஒரு தப்பபிப் பிராயத்தையே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டுமக்களிடையே ஏற்படுத்தியிருக்கிறார். இதன்மூலம், உத்தமமான பௌத்த மதம் மற்றும் உன்னதமான சிங்கள மொழி என்பவற்றின் ஊடாக சிங்களத் தலைவர் கள் எவ்வளவு தூரம் அரசியலில் குளிர்காய்கின்றனர் என்பதையே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுதந்திர தின உரை வெளிப்படுத்தியிருந்தது.

Eelanadu ஈழநாடு
06.02.2021 சனிக்கிழமை
சார்வரி, தை 24

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# இந்தியாவின் மீள் வலியுறுத்தல்

கிழக்கு கொள்கலன் முனைய விவகாரத்தில் கொழும்பு ஏற்கனவே செய்துகொண்ட ஒப்பந்தத்திலிருந்து வெளியேறியிருக்கின்றது. தற்போது மேற்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவிற்கு பரிந் துரைத்திருக்கின்றது. இதற்கு இந்தியா எவ்வாறு பதிலளிக்கும் என்பதை பொறுத்திருந்துதான் நோக்கவேண்டும். ஆனால், இந்தியா வைப் பொறுத்தவரையில் ஏற்கனவே செய்துகொண்ட ஓர் உடன் பாட்டிலிருந்து அரசாங்கம் விலகியிருப்பதும், அதற்கு பதிலாக பிறிதொரு இடத்தை பரிந்துரைத்திருப்பதும் இராஜதந்திர ரீதியில் ஒரு பின்ன டைவே.

இவ்வாறானதொரு பின்புலத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி.ஜெய்சங்கர் மீண்டும் 13ஆவது திருத்தச்சடத்தை முழுமையாக அமுல்படுத்தவேண்டிய அவசியம் தொடர்பில் வலியுறுத்திருக்கின்றார். பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்திருக்கின்றார். அதேவேளை, இந்திய துணைத் தூதுவர் அண்மையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் விடு தலைப் புலிகளின் முன்னாள் கிழக்கு மாகாண தளபதி விநாயகமூர்த்தி முரளி தரன் (கருணா) ஆகியோரை சந்தித்து கிழக்கு நிலைமைகள் தொடர் பில் கலந்துரையாடியிருக்கின்றார்.

தெற்கின் கடும்போக்குவாதிகள் மாகாண சபை தேர்தலை நடத்தவேண்டாமென்றும், அதற்கு முன்பாக புதிய அரசியல் யாப்பை கொண்டுவருமாறும் கோரிவருகின்ற நிலையில்தான், இந்தியா தொடர்ந்தும் 13ஆவது திருத்தச்சட்டத்தை வலியுறுத்திவருகின்றது. இதற்கிடையில் இந்தியாவிற்கான தூதுவரை நியமிக்கும் விவகாரமும் இன்னும் முடிவுக்கு வரவில்லை. ஆரம்பத்தில் மிலிந்த மொறகொடவின் பெயர் வெளியில் வந்தபோதிலும்கூட, அதில் ஏற்பட்ட நெருக்கடிகளி னால் அரசாங்கம் புதிய ஒருவரை நியமிக்கவேண்டிய நிலையில் இருக்கின்றது.

தமிழர் தரப்புக்களும் சிங்கள கடும்போக்குவாதிகளும் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் எவ்வாறான அபிப்பிராயங்களை வெளி யிட்டபோதிலும்கூட, புதுடில்லி தொடர்ந்தும் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பிலேயே வலியுறுத்திவருகின்றது. முன்னைய ஆட்சியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு புதிய அரசியல் யாப்பொன்றுக்காக முயற்சித் திருந்தபோதிலும்கூட, இறுதியில் அது கைகூடவில்லை. உண்மையில், புதிய அரசியல் யாப்பொன்றுக்கான நம்பிக்கை சம்பந்தன் மற்றும் சுமந்திரனை தவிர வேறு எவரிடமும் இருந்திருக்கவில்லை. அதே வேளை, முன்னைய அரசாங்கத்தில் ரணில் விக்கிரமசிங்க மற்றும் மங்கள சமரவீர போன்ற ஒருசிலரைத் தவிர, ஏனையவர்கள் அரசியல் தீர்வு விடயத்தில் கரிசனை காண்பிக்கவில்லை. கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவர் ஒருவரின் வார்த்தையில் கூறுவதனால், பெரும் பாலான சிங்கள அரசியல்வாதிகள், புதிய அரசியல் யாப்பு விவகாரத்தை, வேலையற்றவர்களின் வேலை என்றவாறே நோக்கினர்.

மீளவும் ராஜபக்ஷக்கள் ஆட்சியை கைப்பற்றியிருக்கின்ற நிலை யில், மீளவும் புதிய அரசியல் யாப்பொன்று தொடர்பில் பேசிவருகின்றனர். ஜனாதிபதியின் சுதந்திர தின உரையின்போது, அவர் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் புதிய அரசியல் யாப்பொன்று வருமாக இருந்தால், அது எவ்வாறான ஒன்றாக அமைந்திருக்கும் என்பதை தெளிவாகவே உணர்த்துகின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில், 13ஆவது திருத்தசட்டமும் இல்லாது போகுமானால் தமிழ் மக்களின் நிலைமை மேலும் மோசமடையும். அதன் பின்னர் இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வு தொடர்பில் விவாதிப்பதற்கான வழி நிரந்தரமாக மூடப்பட்டுவிடும். தமிழ் தலைமைகள் இதனை உணர்ந்து செயல்படாவிட்டால், அதன் பின்னர் தங்களை தலைமையென்று சொல்லிக் கொள்வதில் பய னில்லை. ஏனெனில், எல்லாம் தமிழர்களிடமிருந்து சென்ற பின்னர் தமிழ் மக்களுக்கு எதற்கு தலைமை?

# பௌத்த - சிங்கள தேசம்!

- அலசுவது இராஜதந்திரி -

இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இத்தடவை இலங்கையின் 73ஆவது சுதந்திரதின உரையை நிகழ்த்திய போது தம்மை ஒரு பௌத்த சிங்கள பிரஜை எனக்குறிப்பிட்டதோடு, பௌத்த தர்மத்தின் அடிப்படையிலேயே நாட்டை ஆட்சி செய் கிறேன் எனவும் குறிப்பிட்டிருந்தார்.



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தமது உரையில் இலங்கையின் சுதந்திரத்துக்காக போராடிய பெரியவர்களை நினைவு கூர்ந்த போது, சேர்.பொன்னம்பலம் இராமநாதனையும் குறிப்பிடடிருந்தார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தம்மை ஒரு பௌத்த சிங்கள தலைவர் என்று சுதந்திர இலங்கையில் குறிப்பிட்டு பெருமைப்படுவதற்கும் சேர். பொன்னம்பலம் இராமநாதனே காரணமாக இருந்துள்ளார் என்பதையும் அறிந்திருக்க வேண்டியவராகின்றார்.

இலங்கை ஆங்கிலேய ஆட்சியில் இருந்த போது ஆங்கிலேயர்கள் ஆங்கில மொழி, கிறிஸ்தவ மதம் என்பவற்றையும் நாட்டில் பரவச்செய்வதில் முனைப்பாக இருந்தனர். அச்சமயம், சேர் பொன்னம்பலம் இராம நாதன் இந்து சமயத்தை பாதுகாத்த அதே சமயம், பௌத்த மதம், சிங்கள மொழி என்ப வற்றையும் பாதுகாப்பதில் தமது பங்களிப்பை வழங்கினார்.

**சேர். பொன்னம்பலம் இராமநாதன்**

சேர். பொன்னம்பலம் இராமநாதனின் முயற்சியினாலேயே வெசாக் பண்டிகைக்கு ஆங்கிலேயர் ஆட்சியில் முதல் முறையாக அரச விடுமுறை வழங்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. இதுதவிர, சேர். பி. இராம நாதனின் குடும்பத்தைச் சேர்ந்த கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி இலங்கையில் பௌத்த மதம் பற்றியும், சிங்கள மக்களது கலை, கலாசார பாரம்பரியங்கள் என்பவைபற்றியும் பல ஆராய்ச்சி நூல்களையும் எழுதியுள்ளார் என்பதுவும் நினைவுகூரப்பட வேண்டிய தாகின்றது.

சேர். பொன்னம்பலம் இராமநாதன் ஒரு தடவை கொழும்பிலுள்ள பிரபல பௌத்த - சிங்கள கல்வி நிறுவனமான ஆனந்தா கல்லூ ரியின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தின ராக கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோது சிங்கள மொழியின் முக்கியத்துவத்தை விப ரித்ததோடு, சிங்கள மாணவர்கள் தமது தாய் மொழியான சிங்கள மொழியை பேசவேண்டு மெனவும், சிங்கள மொழியை சிங்களவர்கள் பேசாவிட்டால் வேறுயார் பேசப்போகி றார்கள்? எனவும் தெரிவித்திருந்தார்.

**ஆனந்தா கல்லூரி**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரட்ண உட்பட, முப்படைகளில் படைத் தளபதிகளாகவும் வேறு உயர் பதவி களிலுமிருந்த பலர் கொழும்பு ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் அதற்குப் பின்னர் சிங்கள மொழி இலங்கையில் உத்தியோகபூர்வ மொழியாக அறிவிக்கப்படும்வரையும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்களே ஆங்கிலம், மற்றும் விஞ்ஞான பாடங்களை ஆனந்தா கல்லூரியில் கற்பித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மற்றும், சிங்கள மாணவர்கள் பலர் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல பாடசாலைகளில் கல்வி கற்ற அதேசமயம், யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக்கொண்ட தமிழ் மாணவர்கள் தென்னிலங்கையில் பல்வேறு பகுதிகளிலுள்ள பிரபல பாடசாலைகளில் கல்வி பயின்றதோடு, அப்பாடசாலைகளில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஆசிரியர்களும் கல்வி கற்பித்திருந்தனர். இத்தகைய கல்விமூல மான இன நல்லுறவு நீண்ட நெடுங்காலமாக பாடசாலை மட்டங்களிலிருந்து பல்கலைக் கழகங்கள் வரை விரிவடைந்து, பின்னர் உயர் பதவிகளில் பணியாற்றிய தமிழர்கள் சிங்கள பிரதேசங்களிலும், சிங்கள் உயரதிகாரிகள் தமிழ் பிரதேசங்களிலும் பணிபுரிந்திருந்தனர் இனநல்லுறவை பேணியிருந்தனர்.

ஆனால், நாட்டின் கல்வி முறைகளில் மாற்றங்களைக் கொண்டுவந்து, தமிழ், சிங்கள இனவேறுபாட்டை கூர்மையாக்கிவிட்டுள்ள தையே இப்போது காணமுடிகிறது. இதன் வெளிப்பாடாகவே இத்தடவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையின் 73ஆவது சுதந்திரதினத்தில் தம்மை ஒரு பௌத்த - சிங்கள பிரஜை என்று மார்தட்டிப் பேசியுமிருந்தார்.

பல்லின, பல மதங்களைக்கொண்ட எந்தவொரு நாட்டிலும் அந்நாட்டின் தலைவர் தனது சொந்த மொழியைப் பற்றியோ, மதத்தைப் பற்றியோ குறிப்பிட்டு பேசுவாரேயானால் அவர் பல்லின, பலமதங் களைக்கொண்ட ஒரு நாட்டின் தலைவராக இருப்பதற்கு தகுதியற்றவர் என்றே கருத முடியும்.

**லக்ஷ்மன் கதிர்காமர்**

இலங்கையின் 73ஆவது சுதந்திரதினத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னை ஒரு பௌத்த-சிங்கள தலைவரென்று கூறிய நிலையில் நினைவுகொள்ளப்படவேண்டிய

(02ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# களனி பல்கலைக்கழகத்தில் 5 மாணவர்களுக்கு தொற்று

கொழும்பு, பெப். 06

களனி பல்கலைக்கழகத்தில் இரு மாணவர்களுக்கும் மூன்று மாணவிகளுக்கும் கொரோனா தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது.

கல்வி நடவடிக்கைகளுக்காக எழுமாறாக விடுதிகளில் தங்கியுள்ள மாணவிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர் பரிசோதனைகளிலேயே குறித்த மாணவ மாணவிகளுக்கு கொரோனா தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது.

பெப்ரவரி - 6 சனிக்கிழமை
சார்வரி வருடம் - தை 24
நல்ல நேரம் : 7.30 - 9.00
எமகண்டம் : 1.30 - 3.00
திதி : தசமி



இன்றைய ராசிபலன்

06.02.2021

**மேடம்** மனக்குழப்பம் ஏற்படும் நாள். ஆதாயமில்லாத அலைச்சல். எந்தவொரு காரியத்தையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசிப்பது நல்லது. பயணத்தை தள்ளி வைக்க நேரிடும்.

**இடபம்** முயற்சிகளில் வெற்றி கிட்டும். முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். சகோதர வழியில் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும். வருமானம் திருப்தி தரும்.

**மிதுனம்** யோகமான நாள். புதிய வேலை வரலாம். தன்னம்பிக்கையோடு பணிபுரிவீர்கள். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். நீண்ட நாளைய பகையொன்று நட்பாகலாம்.

**கடகம்** பொதுவாழ்வில் புகழ் கூடும்நாள். வியாபார விரோதம் விலகும். வீடுவாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்கள் நல்ல தகவலைத் தருவர்.

**சிம்மம்** சுபச்செலவுகள் அதிகரிக்கும் நாள். சுற்றியிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. திட்டமிட்ட காரியங்களை செய்து முடிப்பீர்கள். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**கன்னி** தொட்டது துலங்கும். செய்த காரியங்களில் கூட வெற்றி. பணப்புழக்கம் அதிகரிக்கும். தொழிலை விரிவு செய்ய முன்வருவீர்கள். உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர்.

**துலாம்** நினைத்தது நிறைவேறும் நாள். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற குடும்பத்தினர்களின் ஒத்துழைப்பு அஸ்திவாரத்தோடு நின்ற கட்டிடப்பணிகளை மீதியும் தொடருவீர்கள்.

**விருட்சிகம்** வாக்கைக் காப்பாற்றும் நாள். தொழில் வளர்ச்சி மேலோங்கும். நடைபெறாத காரியம் நடைபெறும்.பொதுவாழ்வில் புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரலாம்.

**தனுசு** பயணங்களால் பலன் கிட்டும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். புண்ணியத்துக்காக செலவிடுவீர்கள். உயர்ந்த நிலையுடைய சந்தர்ப்பங்கள் கைகூடிவரும்.

**மகரம்** நல்ல சம்பவங்கள் நடைபெறும்நாள். குழந்தைகள் நலனில் அக்கறை. ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள். விவாகப் பேச்சுகள் முடிவிற்கு வரும்.

**கும்பம்** அரைகுறையாக நின்ற பணி முடிவடையும் நாள். மாற்றுக் கருத்துடையோர் மனம்மாறுவர். விலகிச் சென்ற சொந்தங்கள். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும்.

**மீனம்** கவனிக்காது விட்ட உடல்நலத்தால் கவலை கூடும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியில் அலைச்சல்களைச் சந்திக்க நேரிடலாம். பழுதானதை சீர் செய்வீர்கள்.

# 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி வழங்கப்படவேண்டும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு,பெப்.06

**நாட்டில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு கொவிட்-19 தடுப்பூசி திறம்பட வழங்கப்பட வேண்டுமென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டுகிறது.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அந்தச் சங்கத்தின் உறுப்பினர் மருத்துவர் ஹரித அளுத்கே, கொவிட்-19 இறப்புகளில் 70 வீதமானவை தொற்றுக்குள்ளான 60 வயதுக்கு மேற்பட்ட வயதானவர்களிடமிருந்தே பதிவாகிறது என்று கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது 60 வயதுக்கு மேற்பட்ட 10 வீதமானோரே கொவிட்-19 வைரஸால் பாதிக்கப்படுகின்றனர். எனவே 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி வழங்கும் திட்டத்தை நெறிப்படுத்தவேண்டும். ஏனெனில் இறப்பு எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

குறித்த வயதில் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்தால் இறப்புகளின் எண்ணிக்கை அசாதாரணமாக அதிகரிக்கக் கூடும்.

இந்த வேளையில் திருமணங்கள் மற்றும் விருந்துபசாரங்களில் அதிக எண்ணிக்கையான மக்கள் கலந்து கொள்வதால் இந்நோய் வேகமாகப் பரவுகிறது.

கொவிட்-19 நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவது தொடர்பில் அதிகாரிகள் நிலையான முடிவுகளை எடுக்க வேண்டும் என்பதுடன் சிகிச்சை நிலையங்களில் வசதிகளை அதிகரிக்க வேண்டும்.

கொவிட்-19 காரணமாக அண்மையில் உயிரிழந்த ராகம வைத்தியசாலை மருத்துவர்கயான் தந்தநாராயண, தொற்று நோய் வைத்தியசாலையில் சிகிச்சை வசதிகள் இல்லாததால் கராப்பிட்டி போதனா வைத்திய சாலைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது-என்றார்.



# சிவாஜிலிங்கத்தின் வாகனம் மீது விசமிகள் நேற்று திடீர் தாக்குதல்



திருகோணமலை,பெப்.06

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான எழுச்சிப் பேரணியில் கலந்துகொண்ட வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கத்தின் வாகனத்தின் மீது கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் சிவாஜிலிங்கம் தெரிவிக்கையில்:

திருகோணமலை மடத்தடி சந்தியில் வைத்து நேற்றுக்காலை நானும் அனந்தி சசிதரனும் பயணம் செய்துகொண்டிருந்த வாகனத்தின் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் மேற்கொண்டனர். இதனால் வாகனத்தின் கண்ணாடிகள் உடைத்தெறியப்பட்டுள்ளன.

அவர்களுடைய கைகளிலே பெற்றோல் நிரப்பிய போத்தல்கள் காணப்பட்டன. பொலிஸார் பக்கத்திலே நின்றபோதுதான் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது. விழவிழ எழுவோம் வீழுகொண்டு எழுவோம் என்ற அடிப்படையிலே நாங்கள் இந்தப் பயணத்தை நிச்சயமாகத் தொடர்வோம். இனவெறி - மதவெறித் தாக்குதல்களுக்கு நாங்கள் ஒருபோதும் அஞ்சமாட்டோம்- என்றார். (ஏ)

# ஈஸ்டர் தாக்குதல்: சந்தேகநபரிடமிருந்து 3 தொலைபேசிகள் அதிகாரிகளால் மீட்பு

கேகாலை,பெப்.06

கேகாலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களிடமிருந்து தொலைபேசிகள் 5, மின்கலன்கள் 11, சிம் அட்டைகள் 10 என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சிறைச்சாலை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இந்த தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை கேகாலை சிறைச்சாலையின் விஷேட சிறைக்கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 3 தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஏ)

# மேலும் 894 பேர் பூரண சுகம்

கொழும்பு,பெப்.06

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான வர்களுள் நேற்று மேலும் 894 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் 61 ஆயிரத்து 461 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 339 ஆக அதிகரித்துள்ளது. (ஏ)

# வாரி சௌபாக்யா திட்டம் நேற்று ஜனாதிபதி தலைமையில் ஆரம்பம்

கொழும்பு, பெப். 06

வாரி சௌபாக்யா எனும் வட மத்திய மாகாணத்தின் பிரதான நீர்பாசன திட்டத்தின் ஆரம்ப விழா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று ஆரம்பமானது.

அனுராதபுரம் பலுகஸ்வெவ, மஹமீகஸ்வெவ பகுதியில் இந்த நீர்ப்பாசனத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மகாவலி திட்டத்தின் இறுதி கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக வட மத்திய, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் நீர்த் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நீர்ப்பாசனக் கால்வாய் 28 கிலோ மீற்றர் நீளமுள்ளது எனவும் இதனூடாக 13 பிரதேச செயலர் பிரிவுகளின் மக்கள் பயன் பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# யாழ்.வங்கிக் கட்டடத்துக்கு ஏ.சி. பொருத்த வந்தவருக்கு தொற்று

## 32 பேர் சுயதனிமைப்படுத்தல்

யாழ்ப்பாணம், பெப். 06

**யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்படும் வங்கி கட்டடத்துக்கு வளிச்சீராக்கி (ஏ.சி) பொருத்துவதற்கு வருகை தந்த தென்னிலங்கையைச் சேர்ந்தவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் நகரில் 4 கடைகள் மூடப்பட்டுள்ளதுடன் 32 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.**

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்படும் வங்கி கட்டடத்துக்கு வளிச்சீராக்கி பொருத்துவதற்கு கடந்த மாதம் வருகை தந்த ஒருவருக்கு எழுதுமட்டுவாழ் வீதித் தடையில் வைத்து பி.சி.ஆர் மாதிரிகள் பெறப்பட்டன. அவருக்கு தொற்று உள்ளமை கடந்த புதன்கிழமை உறுதிப்படுத்தபட்டுள்ளது.

அதனடிப்படையில் சம்பந்தப்பட்ட நபரை அடையாளம் தகவல் வழங்கப்பட்ட நிலையில் அவர் யாழ்ப்பாணம் நாக விகாரை விடுதியில் தங்கியிருந்தமை கண்டறியப்பட்டது.

அத்துடன், வங்கிக் கட்டட வேலைகள் நிறுத்தப்பட்டதுடன், தொழிலாளிகள் சிலர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர் சென்றதாகத் தெரிவித்த நாக விகாரைக்கு அண்மையில் உள்ள மருந்தகம் மூடப்பட்டு அங்கு பணியாற்றுபவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அந்த நபர் சென்றிருந்தார் என்ற காரணத்தால் யாழ்ப்பாணம் வேம்படிச் சந்தியில் உள்ள உணவகம், வைத்தியசாலை வீதியில் உள்ள ஐஸ்கிறீம் கடையுடன் கூடிய உணவகம் உள்ளிட்டவையும் மூடப்பட்டுள்ளன.

இவ்வாறு மூடப்பட்ட நிறுவனங்களில் உள்ளவர்கள் பி.சி. ஆர். பரிசோதனைக்கு உள்படுத்தபட்டு தொற்று இல்லை என அறிக்கை கிடைத்தால் திறக்க அனுமதிக்கப்படுவார்கள் என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

(அ)



## தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு:

# கொழும்பு செட்டியார் தெரு வர்த்தகர்கள் போராட்டம்!

கொழும்பு, பெப். 06

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை வலியுறுத்தி, கொழும்பு, செட்டியார் தெரு வர்த்தகர்கள் நேற்று ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

மலையகத்தில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில், செட்டியார் தெரு வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

செட்டியார் தெருவிலுள்ள வர்த்தக நிலையங்களை மூடி, பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

அதேநேரம் கொழும்பு - ஐந்துலாம்பு சந்தியில் தற்போது பதாகைகளை ஏந்தி, செட்டியார் தெரு வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

# 500 மில்லியன் தடுப்பூசிகளை கொள்வனவு செய்ய ஏற்பாடு

கொழும்பு, பெப். 06

வறிய நாடுகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக சர்வதேச செஞ்சி லுவை சங்கம் 500 மில்லியன் தடுப்பூசிகளை கொள்வனவு செய்யவுள்ளது.

இந்த நடவடிக்கை தற் பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தற்பொழுது கொள்வனவு செய்யப்பட்டுள்ள தடுப்பூசிகளில் 115 மில்லியன் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ள தாகவும், அதில் செல்வந்த நாடுகளுக்கே அதிக தடுப்பூசிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எங்கள் பயணத்தை தடுப்பதற்காகவே வீதிகளில் ஆணிகள் வைக்கப்பட்டன

திருமலை, பெப். 06

எமது பேரணியினை தடுக்கவே வீதிகளில் ஆணிகள் வைக்கப்பட்டன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை நடைபெறுகின்ற பேரணியின் மூன்றாவது நாள் நேற்று திருகோணமலையில் ஆரம்பிக்கப்பட்டது.



இந்நிலையில் பேரணி பயணிக்கும் வீதிகளில் ஆணிகள் எறியப்பட்டு, பேரணியில் பங்கேற்ற வாகனங்களின் ரயர்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக சிவில் சமூக பிரதிநிதிகள் பயணித்த வாகனம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் பயணித்த வாகனம், மேலும் சில வாகனங்களின் ரயர்களே இவ்வாறு சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், பேரணி வரும் வீதிகளில் ஆணிகளை வைத்து பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியை தடுத்து நிறுத்தும் மிக மோசமான முயற்சிகள் நேற்று இடம்பெற்றுள்ளன என இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

“இதனை யார் செய்தார்களோ தெரியாது. நாங்கள் உங்களை அடிக்க வரவில்லை. குழப்பம் செய்ய வரவில்லை. நியாயம் கேட்டே செல்கிறோம்.“ என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# பலம் காட்டிவிட்டோம் நடுக்கத்தில் கம்பனிகள்!

## திங்கள் நல்ல முடிவு வரும்

கொழும்பு, பெப். 06

“முயற்சி செய்யாமல் எதுவும் கிடைக்காது. அடையாள வேலை நிறுத்த போராட்டம் மூலம் மக்கள் தமது ஒற்றுமையை வெளிப்படுத்தியுள்ளனர். எனவே, திங்கட்கிழமை நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் சம்பள உயர்வு தொடர்பில் சாதகமான முடிவு கிடைக்கும் என நம்புகின்றோம்.”

- என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தமக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களால் முன்னெடுக்கப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டம் மற்றும் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து இடம்பெற்ற கடையடைப்பு போராட்டம் ஆகியன தொடர்பில் ஹற்றனில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே ஜீவன் தொண்டமான் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

தொழிலாளர்களுக்கான ஊதிய உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டத்துக்கு நாம் அழைப்பு விடுத்திருந்தோம். அந்தவகையில் தொழிலாளர்களின் போராட்டத்துக்கு சர்வமதத் தலைவர்கள், தொழிற்சங்கங்கள், வர்த்தகர்கள், சிவில் அமைப்புகள், ஆசிரியர்கள், தோட்டத்தொழிலில் அல்லாமல் ஏனைய தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் என பல தரப்பினரும் இதற்கு ஆதரவு தெரிவித்தனர். எதிர்ப்பார்த்ததைவிடவும் பேராதரவு கிட்டியது. இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் கூட உணர்வு பூர்வமாக ஆதரவு வழங்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல கொழும்பிலுள்ள வர்த்தகர்களும் ஆதரவை நல்கியுள்ளனர். 8 சர்வதேச நாடுகளும் தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவித்தன. மக்கள் மத்தியில் ஒற்றுமை இல்லை என்ற நினைப்பிலேயே கம்பனிகள் செயற்பட்டுவந்தன. இன்று தொழிலாளர்களின் ஒற்றுமை, பலம் என்பன காண்பிக்கப்பட்டுள்ளது. அதேபோல பொதுவான விடயம், நியாயமாக இருந்தால் இணைந்து போராடுவதற்கு தயார் என்ற தகவலையும் மக்கள் வழங்கியுள்ளனர்.



திங்கட்கிழமை பேச்சுவார்த்தை நடக்கவுள்ளது. தொழிலாளர்களின் பலத்தைக்கண்டு கம்பனிகளும் நடுங்கியுள்ளன. சாதகமான தீர்வு கிடைக்கும் என நம்புகின்றோம். சம்பள உயர்வு எப்போது கிடைக்கும் என்பது தொடர்பான அறிவித்தால் திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

அதேவேளை, இது இ.தொ.காவின் பலத்தைக்காட்டுவதற்காக நடத்தப்பட்ட போராட்டம் அல்ல. கம்பனிகளுக்கு எதிரானது. மக்கள் தமது பலத்தைக்காட்டியுள்ளனர். முயற்சி செய்யாமல் எதுவும் கிடைக்காது. இதன்படி பாரிய போராட்டத்தை நடத்தி மக்களின் ஆதரவை வெளிப்படுத்தியுள்ளோம்- என்றார்.



## கிழக்கு முனைய விவகாரம்

# இலங்கை அரசின் முடிவு ஒருதலைப்பட்சமானது!

## ஜப்பானும் கடும் விசனம்

கொழும்பு,பெப்.06

**கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் ஜப்பான், இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் இணைந்து 2019ஆம் ஆண்டு மே மாதம் மேற்கொண்ட முத்தரப்பு இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய இலங்கை எடுத்துள்ள முடிவு “ஒருதலைப்பட்சமானது மற்றும் வருந்தத்தக்கது” என்று ஜப்பான் தெரிவித்துள்ளது.**

இந்தியாவில் உள்ள ஜப்பான் தூதரக அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி ‘தி இந்து’ இதனைத் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகிரா சுகியாமா, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவை சில நாட்களுக்கு முன்னர் சந்தித்தபோது இது தொடர்பில் விரிவாக கலந்துரையாடினார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்புக்கு முன்னதாக, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரை இவ்விடயம் தொடர்பில் சந்தித்திருந்தார்.

கடந்த ஜனவரி மாதம் 6 ஆம் திகதி இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில், இந்த முதலீடு தொடர்பில் இந்தியா எதிர்பார்ப்புடன் இருந்ததாக இந்து நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இந்தியாவுக்கு கிழக்கு முனையத்துக்குப் பதிலாக மேற்கு முனையத்தில் முதலீடு செய்ய வாய்ப்பளிக்கப்படும் என இலங்கை தெரிவித்துள்ள போதும், இது தொடர்பில் இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என இந்தியத் தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கு முனையம் போன்று மேற்கு முனையம் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்ததா? என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என அந்தச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் ஜப்பான், இந்தியா மற்றும் இலங்கை ஆகியன இணைந்து 2019ஆம் ஆண்டு மே மாதம் மேற்கொண்ட முத்தரப்பு இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தை இரத்துச் செய்யவதாக கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் பிரதமர் மஹிந்த அறிவித்துள்ள நிலையில் இது குறித்து ஜப்பானிய அரசாங்கம் விரிவாக ஆராய்ந்து வருவதாக இந்தியாவில் உள்ள ஜப்பான் தூதரக அதிகாரி தெரிவித்துள்ளார்.

முன்னாள் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்துடன் இந்தியாவும் ஜப்பானும் இணைந்து கையெழுத்திட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய இலங்கை அரசாங்கம் எடுத்த முடிவு ஒருதலைப்பட்சமானது. இந்த முனையம் தொடந்து முழுமையாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளமை வருந்தத்தக்கது எனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஜனவரி 6 ஆம் திகதி கொழும்புக்கு விஜயம் செய்த போது அவரது நிகழ்ச்சி நிரலில் முக்கிய விடயமாக கிழக்கு முனைய விவகாரம் அமைந்திருந் தது.

எனினும் முத்தரப்பு ஒப்பந்தத்தை இரத்துச் செய்யும் இலங்கையின் ஒரு தலைப்பட்சமான முடிவு குறித்து இந்தியாவும் ஜப்பானும் ஆத்திரமடைந்துள்ளன.

இந்நிலையில் இந்த ஒப்பந்தத்தக்துக்குப் பதிலாக ஒரு மாற்றுத் திட்டத்திற்கான வாய்ப்பை இரு நாடுகளும் மறுபரிசீலனை செய்யுமா? அல்லது ராஜபக்ஷ அரசாங்கம் தனது முடிவை மறுபரிசீலனை செய்ய அழுத்தங்களைப் பிரயோகிக்குமா? என்பதே தற்போதை கேள்வியாக உள்ளதாகவும் தி இந்து தெரிவித்துள்ளது.

# மியன்மாருக்கு ஏற்பட்ட நிலை இங்கு ஏற்பட வாய்ப்பு இல்லை

## கூறுகிறது பொதுஜன பெரமுன



கொழும்பு, பெப். 06

மியன்மாரில் ஆட்சி அதிகாரத்தை இராணுவம் கைப்பற்றியதுபோல இலங்கையில் நடப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினரும், இராஜாங்க அமைச்சருமான ஷெகான் சேமசிங்க தெரிவித்தார்.

இலங்கையில் முக்கிய பதவிகளுக்கு இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுவருகின்றனர்.

எதிர்காலத்தில் பிரதேச செயலாளர் பதவிக்கும் இராணுவத்தினர் நியமிக்கப்படக்கூடும் என தகவல் வெளியாகியுள்ளது. எனவே, எதிர்காலத்தில் மியன்மாரில்போன்று இராணுவ ஆட்சியேதும் ஏற்படக்கூடுமா என்று எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில்அவர்மேலும் கூறியவை வருமாறு: -

மியன்மாரில் இராணுவ ஆட்சி ஏற்பட்டகையோடு, மங்கள சமரவீரதான் இது குறித்து எச்சரிக்கை விடுத்து முதல் அறிக்கையை வெளியிட்டார். மியன்மாரில் ஏற்பட்ட நிலைமை இங்கு ஏற்படாது.

அத்துடன் பிரதேச செயலாளர் பதவிக்கு, சிவில் அதிகாரிகளுக்குப் பதிலாக இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர் எனக்கூறப்படுவது பொய்யாகும். அவ்வாறான நியமனங்கள் வழங்கப்படாது என்பதனை மிகவும் பொறுப்புடன் கூறிக்கொள்கின்றோம்.

மியன்மாரில் ஏற்பட்டது போல் இலங்கையில் ஏற்பட வேண்டும் என எதிரணி உறுப்பினர்கள் சிலர் விரும்புகின்றனர். இராணுவ சதி புரட்சிக்கு இங்கு இடமில்லை. அவ்வாறு நடக்கவும் நடக்காது.

அதேவேளை, மனித உரிமை குற்றச்சாட்டுகளை முன்னிலைப் படுத்தி இலங்கைக்கு விடுக்கப்படும் சவால்களை நாம் நிச்சயம் உரியவகையில் எதிர்கொள்வோம்-என்றார்.

# கடல் வழியாக தாயகம் திரும்பியவர் கைதானார்

யாழ்ப்பாணம், பெப். 06

இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணம் - வளலாய் பகுதிக்கு, சட்டவிரோதமாக நாடு கடந்து வந்த ஒருவர், பலாலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

வளலாய் வடக்குப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே, இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இளைஞர், 2012ஆம் ஆண்டில் இந்தியாவுக்குச் சென்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், மேற்படி இளைஞர் கடந்த செவ்வாய்க்கிழமை சட்டவிரோதமான முறையில் வளலாய் பகுதிக்கு வந்துள்ளார் எனப் பொலிஸார் மேலும் கூறினர்.

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1964 ஆம் ஆண்டு சிங்கம், உத்தரம் முதலாம் பாதம், கனடா பிரஜா உரிமை உள்ள (இரட்டை பிரஜா உரிமை) விவாகரத்துப் பெற்ற, யாழில் அரச சேவையில் MBBS Doctor ஆகப் பணிபுரிபவருக்கு மணமகள் தேவை. **தொடர்பு: 072 619 2526**




## கொழும்புத்துறைமுக கிழக்கு முனையம்:

# சர்வதேச உறுதிமொழிகளை இலங்கை பின்பற்றவேண்டும்

## இந்தியா மீண்டும் வலியுறுத்தல்



புதுடில்லி, பெப். 06

கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையம் தொடர்பாக இலங்கை, தனது சர்வதேச வாக்குறுதிகளை பின்பற்றவேண்டியது மிகவும் அவசியமாகுமென இந்தியா மீண்டும் அறிவித்துள்ளது.

கிழக்கு கொள்கலன் முனையம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே இந்திய வெளிவிவகார அமைச்சின்பேச்சாளர் அனுரக் ஸ்ரீவத்சவ இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது: இந்தியா, இலங்கை மற்றும் ஜப்பான் அரசாங்கங்கள், கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்து இயக்குவதற்காக கடந்த 2019 மே மாதம் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டமை அனைவரும் தெரிந்த விடயமாகும்.

மேலும், துறைமுகம் எரிசக்தி போன்றவற்றில் இலங்கையின் உட்கட்டமைப்புகளை இந்தியா சீனாவின் முதலீடுகளுடன் அபிவிருத்தி செய்வது, பரஸ்பர நன்மையளிக்கக்கூடிய விடயமாக காணப்படும் என நாங்கள் நம்புகின்றோம்.

ஆகவே இவ்விடயம் தொடர்பாக சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்றியமை தொடர்பில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்-என்றார்.

# அரசின் அடக்குமுறையே தமிழர்களை போராட்டத்தை நோக்கித் தள்ளுகிறது

## மனோ கணேசன் விசனம்



கொழும்பு,பெப். 06

**தமிழ் பேசும் இலங்கையர்களின் தேசிய இருப்பை அழித்தொழிக்கும், ஒடுக்குமுறை ராஜபக்ஷ அரசு, தமிழ் மொழியை பேசுகின்ற, இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க மதங்களை கடைப்பிடிக்கின்ற தமிழ், முஸ்லிம் மக்களை ஜனநாயகப் போராட்டங்களை நோக்கி தள்ளி விட்டுள்ளது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நடப்பு ராஜபக்ஷ அரசின் "ஒரே நாடு, ஒரே சட்டம்" என்ற என்ற கூச்சல் நடைமுறையில், "ஒரே மொழி, ஒரே மதம், ஒரே இனம்" என்பதில் வந்து நிற்கிறது. இதை நாம் இன்று தெளிவாக புரிந்துகொண்டுள்ளோம். இந்த ஏகபோக கொள்கையை நாம் ஒருபோதும் ஏற்க முடியாது. இதை இந்நாட்டு அரசும், உலகமும் புரிந்துக்கொள்ளவேண்டும்.

உண்மையில் ஒளிவு மறைவு இல்லாமல் இதை இந்த அரசு செய்வதை எண்ணி நாம் மகிழத்தான் வேண்டும். உள்ளொன்று வைத்து புறமொன்று செய்யவில்லையே, இவர்கள்! இந்நிலையில் அனைத்து ஜனநாயக சக்திகளையும் அணிதிரட்டி இந்த அடக்கு முறைகளுக்கு எதிராக, இந்நாட்டில் எமது இருப்பை உறுதி செய்துக்கொள்ள நாம் போராட வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

நீண்டகாலமாக ஒத்தி வைக்கப்பட்டிருந்த தேசிய ஜனநாயக போராட்டம் இப்போது ஆரம்பித்திருப்பதை எண்ணி மகிழ்கிறேன்.

இந்த இலங்கை திருநாடு, "பன்மொழி, பன்மத, பல்லின" அடிப்படையை கொண்ட பன்மைத்துவ நாடு என்ற இலக்கு அதிகார பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும் வரை இந்த போராட்டம் தொடரவேண்டும்.

இந்நாட்டின் வரலாற்றில் தமிழ் மக்களுக்கு இருக்கின்ற பங்கும், இன்றைய இலங்கை நாட்டின் ஆட்சியுரிமை, இறைமை ஆகியவற்றில் தமிழ் பேசும் மக்களுக்கு இருக்கின்ற மறுக்கப்பட முடியாத உரிமையும் உறுதிப்படுத்தப் படும்வரை இப்போராட்டம்தொடர வேண்டும்.

தமிழ் பேசும் மக்களையும் உள்ளடக்கியதே இலங்கை நாடு என்ற அடிப்படை உண்மையை சிங்கள முற்போக்கு சிந்தனையாளர்கள் ஏற்றுக் கொண்டு கண் திறக்கும் வரை இப்போராட்டம் தொடர வேண்டும்.

இதுவே ராஜபக்ஷ ஆட்சியின் "ஒரே நாடு, ஒரே சட்டம், ஒரே இனம், ஒரே மதம், ஒரே மொழி" என்ற கொள்கைக்கு உரிய தர்க்க ரீதியான அரசியல் பதிலாகும். இந்த ஜனநாயக போராட்டத்துக்குஎமது ஆதரவை நல்குகிறோம். ஜனநாயக போராட்ட களத்தில் நிச்சயமாக நாம் கரம் கோர்ப்போம்-என்றார்.

## 200 ஊடகவிலாளர்களுக்கு பி.சி.ஆர். 18 பேருக்கு தொற்று உறுதியாகியது

கொழும்பு, பெப். 06

கொழும்பு - சுதந்திர சதுக்கத்தில் நடந்த சுதந்திர தின கொண்டாட்ட நிகழ்வுகளில் செய்தி சேகரிக்க அனுமதிக்கப் படுவதற்கு முன்னர் ஊடக வியலாளர்களிடம் மேற்கொள் ளப்பட்ட பரிசோதனையில் 18 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுதந்திர தின நிகழ்வில் செய்தி சேகரிக்க அனுமதிக்கப் படுவதற்கு முன்னர் அதற்காக விண்ணப்பித்த அச்சு, இலத்திரனியல் ஊடகங்களைச் சேர்ந்த சுமார் 200 ஊடக வியலாளர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப் பட்டதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களில் தொற்று உறுதி செய்யப்பட்ட 18 பேரும் கொரோனா சிகிச்சை மையங்களுக்கு அனுப்பப்பட்டனர். எதிர்மறையாக சோதனை முடிவு வந்தவர்கள் மட்டுமே சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்க அனுமதிக்கப்பட்ட தாகவும் அரசாங்க தகவல் திணைக்களம் கூறியுள்ளது.




# மன்னர் கால சிங்கக்கொடியே உண்மையான தேசியக்கொடி

## சர்ச்சையைக் கிளப்புகிறார் பிக்கு

கொழும்பு, பெப். 06

இலங்கையின் உண்மையான தேசியக்கொடி இதுதான் எனக் கூறி, கண்டி தலதா மாளிகையில் தனிச்சிங்க கொடியை ஏற்ற பௌத்த பிக்குவொருவர் மேற் கொண்ட முயற்சியினால் பர பரப்பான நிலைமை ஏற்பட்டது.

நேற்று முன்தினம் இலங்கையின் சுதந்திர தினத்தில் இந்த சம்பவம் நடந்தது.

மெதிரிகிரிய சுகி தேரர் என்பவர் இந்த சர்ச்சைக்குரிய முயற்சியில் ஈடுபட்டார். இலங்கை தேசிய கொடியில் பல்லின அடையாளங்கள் நீக்கப்பட்டு, தனிச்சிங்கத்துடனான கொடியை அவர் கையில் எடுத்து வந்திருந்தார்.

கண்டிக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுசுத் மாசிங்க தலைமையிலான பொலிஸார், தலதா மாளிகை நுழைவாயிலில் அவரைத் தடுத்து நிறுத்தினர்.

கொடியை வைத்திருப்பதில் எந்தத் தடையும் இல்லை என்றாலும், தலதா மாளிகை வளாகத்தில் தேசியக் கொடியைத் தவிர வேறு எந்தக் கொடியையும் பறக்க விட முடியாது என்று அவருக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து பொலிஸாருடன் அவர் தர்க்கத்தில் ஈடுபட்டார்.

மன்னர் காலத்திலிருந்து பயன்பாட்டில் இருந்த உண்மையான சிங்களக் கொடி இதுதான், இதைக் கட்டப் போகிறேன் என அவர் அடம் பிடித்தார்.

அந்த நேரத்தில் இப்படியொரு கொடி இருந்திருக்கலாம். ஆனால், இப்போது தேசியக் கொடி மாறிவிட்டது. முஸ்லிம் மற்றும் தமிழ் இலங்கை குடிமக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அடையாளங்களுடன் தேசியக் கொடி உருவாக்கப்பட்டுள்ளதால், தேசியக்கொடியென்ற பெயரில் மற்றொரு கொடியைக் காண்பிப்பது அனுமதிக்கப் படாது என்று பொலிஸார் கூறினர்.

அத்துடன், தலதா மாளிகை வளாகத்தில் இந்த கொடி காட்ட நீதிமன்றத் தடை பெறப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டி, நீதிமன்ற உத்தரவை பொலிஸார் காண்பித்தனர்.

இதன் பின்னர், சிங்களக் கொடியை பொதுமக்களுக்கும் ஊடகங்களுக்கும் காட்டி, அந்தக் கொடியை பொலிஸ் கண்காணிப்பாளரிடம் அவர் ஒப்படைத்தார்.

# வடக்கு அமைச்சுகள், திணைக்களங்கள் மாங்குளம், கிளிநொச்சிக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், பெப். 06

வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சின்கீழ் வரும் விவசாயத் திணைக்களம், கால் நடை உற்பத்தி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் வரும் காணித் திணைக்களம் என்பவற்றை மாங் குளம் மற்றும் கிளிநொச்சிப் பிரதேசங்களுக்கு இடமாற்றுவதற்கு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம்.சார்ள்ஸ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப் பாணம் என வடக்கின் அனைத்து மாவட்ட மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஆளுநர் சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

இதன்படி, விவசாய அமைச்சின்கீழ் வரும் விவசாயத் திணைக்களம் மற்றும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் என்பவற்றை மாங்குளம் பகுதிக்கு இடமாற்ற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம், அதிகளவு விவசாய மற்றும் கால்நடை உற்பத்தி நடைபெறும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட மக்கள் அதிக பயனடையக் கூடியதாக இருக்கும் என்று ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், உள்ளூராட்சி அமைச்சின்கீழ் வரும் மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் கிளிநொச்சிக்கு இடமாற்றப்படவிருப்பதாகக் கூறியிருக்கும் ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், அதிகளவு காணி தொடர்பான பிணக்குகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களிலேயே காணப்படுவதால், அந்த மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு வசதியாக இந்த முடிவு எட்டப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணசபை உருவாக்கப்பட்ட காலம் முதல் அதன்கீழ் வரும் அனைத்து அமைச்சுக்களும், திணைக்களங்களும் யாழ். மாவட்டத்திலேயே செயற்பட்டு வருகின்றன. இதனால், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் மாகாணசபை மூலமான தேவைகளை நிறைவேற்ற யாழ்ப் பாணத்துக்கே வரவேண்டியிருந்தது.

இப்போது ஆளுநர் சார்ள்ஸ் எடுத்திருக்கும் முடிவின்படி, வடக்கின் அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் மாகாண சபை நிர்வாகத்தை சம அளவில் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

வடக்கு மாகாணசபை, வடக்கின் அனைத்து மாவட்டங்களுக்கும் மையமாக விளங்கும் மாங் குளம்பிரதேசத்திலேயே அமைய வேண்டும்என்ற கோரிக்கை நீண்ட காலமாக பல தரப்புக்களாலும் முன்வைக்கப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## பொத்துவில்-பொலிகண்டிவரை:

# வடமாகாண புதிய அதிபர்கள் சங்கம் முழுமையான ஆதரவு

யாழ்ப்பாணம், பெப். 06

வடக்கு கிழக்கு சிவில் அமைப்புகளினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் பேரணிக்கு வட மாகாண புதிய அதிபர்கள் சங்கம் பூரண ஆதரவை வழங்கியுள்ளது.

இது குறித்து குறித்த சங்கத்தினர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்திருப் பதாவது:

பொத்துவிலிலிருந்து பொலி கண்டி வரையான தமிழ் பேசும் மக்களின் நடை பயணத்தில் மதத்தலைவர்கள், சிவில் சமூக அமைப்புகள், அரசியல் தலைவர் கள் மற்றும் செயற்பாட்டா ளர்கள், பொதுமக்கள ஆகியோ ரின் பேரெழுச்சி பெற்ற ஜனநாய கப் போராட்டத்திற்கு தமிழ் பேசும் தொழிற்சங்கத்தின் சார் பில் வடமாகாண தரம் பெற்ற புதிய அதிபர் சங்கமும் தனது பூரண ஆதரவினைத் தெரிவித்துக் கொள்கின்றது.

சிறுபான்மைச் சமூகத்தின் மறுக்கப்பட்ட நீதியை பெற்றுக் கொள்வதற்காக காலத்திற்கு காலம் நடைபெற்று வருகின்ற ஜனநாயகப் போராட்டங்களின் வரிசையில் எமது நில உரிமை கபளீகரம் செய்ய நடைபெறும் முயற்சிகளைத் தடுப்பதற்கும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு நீதி வேண்டியும், சர்வதேசதலையீட்டுடன் தமிழர் அரசியல் உரிமைகளை பெற்றுக் கொள்ளவும் முன்னெடுக்கப்படு கின்ற இப்போராட்டம் எழுச்சி யடைய அனைவரது ஆதரவும் வேண்டி நிற்கின்றோம் எனக் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழநாடு



“ நல்லாட்சிக் காலத்தில் ஈழத் தமிழர் பிரச்னை குறித்து இந்தியா பெருமளவுக்கு மௌனமாகவே இருந்தது. ராஜபக்ஷக்களின் ஆட்சி மீண்டும் ஏற்பட்ட பின்னர்தான் இந்தப் பிரச்னையை அதிகளவுக்கு அவர்கள் பேசத் தொடங்கியுள்ளார்கள். “அனைத்து இன மக்களினதும் அபிலாஷைகளுக்கு ஏற்றவாறு தீர்வு காணப்பட வேண்டும்” என்பதுதான் இந்தியாவின் நிலைப்பாடாக அண்மைக்காலம் வரையில் இருந்தது. இப்போது “தமிழ் மக்களுடைய அபிலாஷைகள்” குறித்து இந்தியா ‘மீண்டும்’ பேசத் தொடங்கியிருக்கின்றது. ”



# தமிழ் மக்களின் அபிலாஷைகள் குறித்து மீண்டும் இந்தியா

- பார்த்தீபன் -

“ஐக்கிய இலங்கைக்குள் சமத்துவத்துக்கும் நீதிக்கும் சமாதானத்துக்குமான தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை கௌரவமான முறையில் பூர்த்தி செய்ய வேண்டும். இதுவே, இலங்கையின் சொந்த நலனுக்கு உகந்தது” என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்திருக்கின்றார். இந்தியாவின் மேல் சபையான ராஜ்ய சபாவில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்து உரையாற்றிய போதே ஜெய்சங்கர் இதனைத் தெரிவித்திருக்கின்றார். இலங்கை தொடர்பாக ஜெய்சங்கர் இரண்டு நாட்களுக்குள் இரண்டாவது தடவையாக அந்தநாட்டு பாராளுமன்றத்தில் கருத்து வெளியிட்டதன் பின்னணியில் முக்கியமான இராஜதந்திர நகர்வுகள் இருக்கின்றன. இலங்கைத் தமிழர்கள் குறித்தும், தமிழக மீனவர்கள் குறித்தும் ஈழத் தமிழர்கள் குறித்தும் இந்தியப் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கும், அதற்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் கொடுத்த பதிலுக்கும் பின்னணியில் இருப்பது கொழும்பு துறைமுக கிழக்கு முனைய விவகாரத்தில் இந்தியா ஏமாற்றப்பட்டமைதான் என்பதில் சந்தேகம் இல்லை.

கிழக்கு முனையம் பொருளாதார ரீதியாவும், கேந்திர அடிப்படையிலும் இந்தியாவுக்கு முக்கியமானது. அதிலும் குறிப்பாக அம்பாந்தோட்டை முறைமுகம், கொழும்பு துறைமுக நகரம் என்பன சீனாவின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில், கிழக்கு முனையத்தின் 49 வீதமான பங்கையாவது ஜப்பானுடன் இணைந்து பெற்றுக்கொண்டு விட வேண்டும் என்பதில் இந்தியா அக்கறையக இருந்தது. அமெரிக்கா உட்ட மேற்கு நாடுகளும் கிழக்கு முனையம் இந்தியாவுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பதிலேயே அக்கறையாக இருந்தன. அமெரிக்கா கடந்த வாரத்தில் இதனைப் பகிரங்கமாகவே அறிவித்திருந்தது. இந்தியாவினதும், மேற்கு நாடுகளினதும் எதிர்பார்ப்புக்கு முரணாக - இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள முடிவு இந்தியாவுக்கும், அதன் நேச நாடுகளுக்கும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கின்றது. இந்த நிலையில்தான் அவசரம் அவசரமாக புதிய நகர்வுகளை இந்தியா மேற்கொண்டிருக்கின்றது.

### இந்தியாவின் நகர்வுகள்

கிழக்கு முனையத்தை யாருக்கும் விற்கப்போவதில்லை எனவும், அதன் பங்குகள் முழுமையாக துறைமுக அதிகார சபையிடமே இருக்கும் எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திங்கட்கிழமை அறிவித்தார். அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்து. கிழக்கு முனையத்தை யாருக்கும் வழங்குவதில்லை எனவும் அதற்குப் பதிலாக மேற்கு முனையத்தை வழங்கலாம் எனவும் அமைச்சரவை தீர்மானித்தது. அமைச்சரவையின் இந்தத் தீர்மானம் துறைமுகத் தொழிற்சங்கங்கள் தடை உத்தரவையும் மீறி தொடர்ந்துவந்த போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவந்தது.

2019 ஆம் ஆண்டில் இந்தியா, ஜப்பான், இலங்கை ஆகிய முத்தரப்பினரால் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையை இது மீறுவதாக அமைந்திருப்பதாக இந்தியத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் உடனடியாகவே அமைச்சரவையின் முடிவுக்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினார். மறுநாள் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோரை நேரில் சந்தித்து தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார். குறிப்பாக, முத்தரப்பு உடன்படிக்கையை இலங்கை அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக மீறிச் செயல்பட முடியாது என்பதை அவர் தெரிவித்தார்.

இவ்வாறு செவ்வாய்கிழமை எதிர்ப்பைத் தெரியப்படுத்திய அதேவேளையில், அரசியல் ரீதியாகவும் சில நகர்வுகளை இந்தியா முன்னெடுத்தது. கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் சிறுபான்மையினக் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்தார். குறிப்பாக விநாயகமூர்த்தி முரளிதரன் - கருணா, சிவநேசத்துரை சந்திரகாந்தன் - பிள்ளையான், ராவூப் ஹக்கீம் போன்றவர்களுடன் இடம்பெற்ற சந்திப்புக்களின் போது மாகாண சபைகள், 13 ஆவது திருத்தம் போன்ற விடயங்களே முக்கியமாக ஆராயப்பட்டன. 13 ஆவது திருத்தத்தைப் பலப்படுத்துவது உட்பட பல விடயங்களில் இந்தியா கொண்டுள்ள அக்கறை இதன் போது வெளிப்படுத்தப்பட்டதாகத் தெரிகின்றது.

### லோக்சபாவின் எதிரொலிப்பு

இலங்கையில் மட்டுமன்றி டில்லியிலும் இலங்கைப் பிரச்னை கடந்த சில நாட்களாக எதிரொலித்தது. இந்தியப் பாராளுமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுவரும் கலமாக இது இருப்பதால், இந்தியத் தரப்பு அதனைப் பயன்படுத்திக்கொண்டதாகத் தெரிகின்றது. தமிழக மீனவர்கள் நால்வர் இங்கைக் கடற்படையினரின் செயற்பாட்டினால் கொல்லப்பட்ட விவகாரம் - அந்தச் சம்பவம் இடம்பெற்று சுமார் இரண்டு வாரங்களின் பின்னர் புதன்கிழமை இந்திய பாராளுமன்றத்தில் எதிரொலித்தது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், சம்பவத்தை வன்மையகக் கண்டிப்பதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார். துமிழக மீனவர் பிரச்னை குறித்து தமிழக எம்.பி.க்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்தபோதே ஜெய்சங்கர் இவ்வாறு தெரிவித்திருந்தார். “தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டமைக்கு இந்தியா தனது கண்டனத்தைத் தெரியப்படுத்தியிருந்தது. மீனவர்கள் கொல்லப்பட்டமை ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு நடவடிக்கை” எனவும் அவர் தெரிவித்தார்.

இதேபோல நேற்று முன்தினம் வியாழக்கிழமையும் இலங்கை விவகாரம் இந்திய பாராளுமன்றத்தில் எதிரொலித்தது. கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த இந்திய வெளிவிகார அமைச்சர், “ஐக்கிய இலங்கைக்குள் சமத்துவத்துக்கும் நீதிக்கும் சமாதானத்துக்குமான தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை கௌரவமான முறையில் பூர்த்தி செய்ய வேண்டும். இதுவே, இலங்கையின் சொந்த நலனுக்கு உகந்தது” எனக் கூறினார். இது ஒரு அறிவுரை போல இருந்தாலும், இதில் மறைமுகமான எச்சரிக்கை ஒன்றிருப்பதையும் அவதானிக்கலாம்.

கடந்த மாதம் கொழும்பில் உயர் மட்ட தலைவர்களுடன் உரையாடியபோது நல்லிணக்க செயல்முறைக்கு இந்தியாவின் ஆதரவை மீண்டும் வலியுறுத்துவதாக அமைச்சர் ஜெய்சங்கர் இந்திய பாராளுமன்றத்தில் தெரிவித்தார். மேலும், “ஐக்கிய இலங்கைக்குள் சமத்துவம், நீதி, சமாதானம் மற்றும் கௌரவம் ஆகிய தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் பூர்த்தி செய்யப்படுமானால், அது, 13ஆவது திருத்தம் உள்பட அர்த்தமுள்ள ஓர் அதிகார பரவலாக்கலுக்காக இலங்கை அரசு அளித்த உத்தரவாதத்தை செயல்படுத்துவதாக அமையும். 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசை இந்தியா வற்புறுத்தி வருகிறது.

எனது அண்மைய விஜயத்தின்போது (ஜனவரி 5 - 7) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தினேஷ் குணவர்த்தன ஆகியோருடனான சந்திப்பில் இது தொடர்பில் கலந்துரையாடினேன். இலங்கையில் நல்லிணக்க செயல்முறைக்கு இந்தியாவின் ஆதரவு நீண்ட காலமாக உள்ளது என்பதை நான் மீண்டும் அவர்களிடம் வலியுறுத்தினேன். தமிழர்களின் நலனைப் பாதுகாப்பது தொடர்பான பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கான உறுதிப்பாட்டை நிறைவேற்ற அனைத்து மட்டங்களிலும் இந்தியா இலங்கைக்கு தொடர்ந்து அழைப்பு விடுத்துள்ளது என்றும் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

### இந்தியாவின் அணுகுமுறை

நல்லாட்சிக் காலத்தில் ஈழத் தமிழர் பிரச்னை குறித்து இந்தியா பெருமளவுக்கு மௌனமாகவே இருந்தது. ராஜபக்ஷக்களின் ஆட்சி மீண்டும் ஏற்பட்ட பின்னர்தான் இந்தப் பிரச்னையை அதிகளவுக்கு அவர்கள் பேசத் தொடங்கியுள்ளார்கள். “அனைத்து இன மக்களினதும் அபிலாஷைகளுக்கு ஏற்றவாறு தீர்வு காணப்பட வேண்டும்” என்பதுதான் இந்தியாவின் நிலைப்பாடாக அண்மைக்காலம் வரையில் இருந்திருக்கின்றது. ஆனால், இப்போது தமிழ் மக்களுடைய அபிலாஷைகள் குறித்து இந்தியா ‘மீண்டும்’ பேசத் தொடங்கியிருக்கின்றது.

இது தமிழ் மக்கள் மீது ஏற்பட்ட திடீர்க் காதலாலோ அல்லது, ஈழத் தமிழர்களின் பிரச்னைக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதாலோ அல்ல. “இந்தியா எம்முடன் நிற்கின்றது” என இதனைப் பார்த்து தமிழ் மக்கள் புழகாங்கிதம் அடைந்துவிட முடியாது. 1980 களில் பிராந்தியத்தில் அமெரிக்காவின் ஆதிக்கத்தை எதிர்கொள்வதற்கு தமிழர் பிரச்னையை இந்தியா எப்படிப் பயன்படுத்தியதோ, அதேபோல, இப்போது சீனாவை எதிர்கொள்ள தமிழர் பிரச்னையை புதுடில்லி கைகளில் எடுக்கின்றது.

முள்ளிவாய்க்கால் படுகொலைகள் இடம்பெற்ற போது, அமைதியாக இருந்த இந்தியா, யாழ். பல்கலைக்கிழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் அழிக்கப்பட்ட போது அதற்கு எதிராக உடனடியாகவே களத்தில் இறங்கியது. இந்தியத் தூதுவர் பிரதமர் மஹிந்தவுக்கு கொடுத்த அழுத்தத்தையடுத்தே பிரச்னையில் முக்கியமான திருப்பம் ஏற்பட்டது என்பது இரகசியமானதல்ல. கிழக்கு முனையத்தைப் பெற்றுக்கொள்வதற்கான அழுத்தங்களைக் கொடுக்க அதனை இந்தியா பயன்படுத்தியது. அதனைவிட, ஜெனிவாவும் இந்தியாவின் துரப்புச்சிட்டுக்களில் ஒன்று.

இந்தளவு துருப்புச் சீட்டுக்களைப் பயன்படுத்தியும், கிழக்கு முனையம் இந்தியாவுக்குக் கிடைக்கவில்லை. இந்த நிலையில்தான் இந்திய பாராளுமன்றத்திலும் இந்தப் பிரச்சினை எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது. இவற்றின் மூலமாகவும் கொழும்பின் அணுகுமுறையை மாற்றிவிட முடியாது என்பதே இராஜதந்திரிகளின் கருத்து.





# மியன்மாரில் என்ன நடக்கிறது?

## பேஸ்புக்கை முடக்கிய இராணுவம்

ஆங் சாங் சூகி மீது ஏற்றுமதி இறக்குமதி மோசடி குற்றச் சாட்டுகளும், தடை செய்யப்பட்ட தொலைத் தொடர்பு சாதனங்களை வைத்திருந்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டு விசாரணைக் காவலில் வைக்கப்பட்டிருக் கிறார்.

மியன்மாரின் அதிபர் வின் மின்ட், கடந்த நவம்பர் 2020 தேர்தல் பிரசாரத்தின்போது கொரோனா விதிமுறைகளை மீறியதாக குற்றம் சுமத்தபட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

மியன்மாரில் இராணுவம் ஆட்சியைக் கவிழ்த்த பிறகு, தற்போது பேஸ்புக்கை மக்கள் பார்க்கக்கூடாது என தடை செய்திருக்கிறது அந்நாட்டு இராணுவம்.

பேஸ்புக் தான் மியன்மாரில் உள்ள பலருக்கு இணையம் வழியாக செய்திகளைக் கொண்டு சேர்க்கும் முக்கிய தளம், அதை மியன்மாரின் 'நிலையானத்தன்மைக்காக' இரா ணுவம் தடை செய்திருப்பதாக பேஸ்புக் தரப்பிலிருந்தே கூறப்பட்டிருக்கிறது.

கடந்த திங்கட்கிழமை நடந்த ஆட்சிக்கவிழ்ப்பை எதிர்ப்பவர்கள் அணிதிரளும் முக்கிய புள்ளியாக பேஸ்புக் இருக்கிறது.

அரசியல்தலைவர்கள்தலைநகரில்தங்களின்இருப்பிடத்தை விட்டு வெளியேற மறுக்கிறார்கள். யங்கூனில் இராணுவ ஆட்சிக்கு எதிராக பாத்திர பண்டங்களை அடித்து ஒலி எழுப்புவது அதிகரித்திருக்கிறது.

ஆங் சாங் சூகி மீது ஏற்றுமதி இறக்குமதி மோசடி குற்றச் சாட்டுகளும், தடை செய்யப்பட்ட தொலைத் தொடர்பு சாதனங்களை வைத்திருந்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டு விசாரணைக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

மியன்மாரின் அதிபர் வின் மின்ட், கடந்த நவம்பர் 2020 தேர்தல் பிரசாரத்தின்போது கொரோனா விதிமுறைகளை மீறியதாக குற்றம் சுமத்தபட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

### பேஸ்புக்கின் பங்கு என்ன?

மியான்மரின் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் அமைச்சகம் வரும் பிப்ரவரி 07ஆம் திகதி வரை பேஸ்புக் தடை செய்யப்படும் எனக் கூறியுள்ளது. ஆனால் அவ்வப்போது பேஸ்புக்கை பயன்படுத்த முடிந்ததாகக் கூறப்பட்டது.

"செல்லுலர் டேட்டா தவிர்த்து வைபை மூலம் பேஸ்புக்கை பயன்படுத்த முடிந்தது. என்னைச் சுற்றியுள்ளவர்கள் என்னை வேறு சில மாற்று செயலிக ளையும், வி.பி.என் போன்றவைகளையும் பதிவிறக்கம் செய்யச் சொல்கிறார்கள்," என்கிறார் யங்கூனில் சுற்றுலா மையம் நடத்திக்கொண்டிருக்கும் அந்தோனி ஆங்.

சில மணி நேரம் கழித்து "பேஸ்புக் கைத் தற்போது கொஞ்சம் கூட பயன் படுத்த முடியவில்லை" என்றார் ஆங்.

ஏற்கனவே கொரோனா பிரச்னை யால் தன் கல்வி பாதிக்கப்பட்டிருப்ப தாகக் கூறுகிறார் யங்கூனில் இருக்கும் மாணவி மின் ஹ்டெட். "இன்று பேஸ் புக் செயலிக்கு தடை விதிக்கப்படுவது இளைஞர்களின் சுதந்திரத்துக்கு தடை விதிப்பதாகப் பொருள்," என ரொய்டர் ஸிடம் கூறினார்.

மியன்மாரில் வாழும் 5.4 கோடி பேரில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பேஸ்புக்கைப் பயன்படுத்துகிறார்கள். இராணுவ ஆட்சியை எதிர்ப்பவர்களை ஒருங்கிணைக்க ஒரு பேஸ்புக் பக்கம் தொடங்கப்பட்டது. அதற்கு பல்லா யிரக் கணக்கில் லைக்குகள் குவிந்தன.

மியன்மாரில் தொடக்கத்தில் பேஸ்புக்கை எந்த ஒரு இணைய செலவும் இல்லாமல் பயன்படுத்தும் ரீதியில் கொண்டு வரப்பட்டது. எனவே மியன்மாரில் பேஸ்புக் மிகவும் பிரபலமானது.

மியன்மாரில் பேஸ்புக்கின் சேவை துண்டிக்கப்பட் டிருப்பதை, அந்நிறுவனமே (பேஸ்புக்) உறுதி செய்திருக் கிறது. மியன்மாரில் இருக்கும் தொலைத் தொடர்பு நிறுவன மான டெலினார் மியன்மார் என்கிற நிறுவனமும், மியான் மரில் பேஸ்புக் செயலியைத் தடை செய்ய ராணுவம் உத்தரவு பிறப்பித்திருப்பதை உறுதி செய்தது.

### 'நிச்சயமாக ஏற்றுக் கொள்ளமுடியாது'

மியான்மரில் அரசமைப்புபடி மீண்டும் ஆணை பிறப் பிக்கப்பட வேண்டும் என ஐ.நா. பொதுச் செயலர் அன்ர னியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் மியன்மாரில் கடந்த திங்கட்கிழமை நடந்த ஆட்சிக் கவிழ்ப்பு தோல்வியடைவதை உலக நாடுகள் உறுதி செய்ய வேண்டும் என அவர் தெரிவித்திருந்தார்.

தேர்தல் முடிவுகளைப் புறக்கணிப்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று என்றும், ஒரு நாட்டை இப்படி ஆட்சி செய்யக் கூடாது எனவும் ஆட்சிக்கவிழ்ப்பு நடத்திய தலை வர்களுக்குப் புரிய வைக்க வேண்டுமெனவும் அவர் கூறி யுள்ளார்.

### தொடரும் போராட்டம்

மண்டலே நகரத்தில், மியன்மார் பல்கலைக்கழகத்தின் முன் இராணுவத்தை எதிர்த்து ஒரு சிறு போராட்டம் நடந்தது. அதில் நான்கு பேர் கைது செய்யப்பட்டார்கள்.

யங்கூனில் பாத்திர பண்டங்களை அடித்து ஒலி எழுப்பி, இராணுவத்துக்கு எதிரான தங்கள் குரலைப் பதிவு செய் வது இரண்டாவது நாளாக தொடர்ந்து கொண்டிருக் கின்றது.

தேசிய ஜனநாயக லீக் கட்சியைச் சேர்ந்த, சட்டமன்ற உறுப்பினர்கள் 70 பேர், மியன்மாரின் புதிய தலைநகரான நேபிடவ் நகரத்தில் இருக்கும் தங்களின் அரசு விருந்தினர் இல்லத்தில் இருந்து போக மறுக்கிறார்கள். அதோடு அவர்கள் பாராளுமன்ற கூட்டத் தொடருக்கு அழைப்பு விடுத்திருப்பதாக பிபிசி பர்மிய சேவை குறிப்பிடுகிறது.

மியன்மாரில் சாலைகளில் பெரும்பாலும் அமைதி நிலவுகிறது. பெரிய அளவில் போராட்டங்களுக்கான அறிகுறிகள் இல்லை. இரவு நேரத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் மருத்துவமனைகளில் போராட்டங்கள் நடந்தன. பல மருத்துவர்கள் தங்கள் பணியைச் செய்யாமல் நிறுத்தினர் அல்லது தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்யும் விதத்தில் சில இலச்சினைகளை அணிந்து கொண்டு பணியில் ஈடுபட்டனர். இராணுவ ஆட்சியை ஆதரிக்கும் விதத்தில் ஆயிரக் கணக்கானவர்கள் பங்கெடுத்த பேரணி நேபிடவ் நகரத்தில் நடந்தது குறிப்பிடத் தக்கது.



### மியன்மாரில் என்ன பிரச்னை?

கடந்த திங்கட்கிழமை முதல் ஆங் சாங் சூகி மற்றும் மியன்மாரின் அதிபர் வின் மின்ட் ராணு வத்தினரால் தடுப்புக் காவ லில் வைக்கப் பட்டிருக்கிறார்கள்.

அடுத்த ஓராண்டுக்கு இராணுவம் அவசர நிலையை அறிவித்திருக்கிறது. 2020ஆம் ஆண்டு நவம்பரில் நடந்த தேர்த லில் மோசடி நடந்திருப்பதாகக் குற்றம் சாட்டி, தன் இராணுவ ஆட்சிக்கவிழ்ப்பை நியாயப்படுத்திக்கொண்டிருக்கிறது மியன் மார் இராணுவம்.

அத்தேர்தலில் ஆங் சாங் சூகி அழுத்த மாக தன் வெற்றியைப் பதிவு செய்தது குறிப் பிடத்தக்கது. தற்போது இராணுவ ஆட்சி யின் நிலைத்தன்மையை உறுதி செய்யவும், இராணுவத்துக்கு எதிராக மக்கள் திரள் வதைத் தடுக்கவும் அதிகார பூர்வமாக பேஸ் புக் செயலியையும் தடை செய்திருக்கிறது மியன்மார் இராணுவம்.

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் படையினரை நிறுத்த முடியாது!

## சம்பிக்க ரணவக்க கடும் எதிர்ப்பு



கொழும்பு, பெப். 6

**இலங்கையில் பாரதூரமான பிரிவினைவாத யுத்தம் நடைபெற்றபோது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க போன்ற தலைவர்களை கொல்வதற்கு முயற்சிக்கப்பட்டதோடு, காமினி திஸாநாயக்க போன்ற தலைவர்கள் கொல்லப்பட்டனர்.**

**இவ்வாறான பயங்கரவாதச் செயல்பாடுகளில் ஈடுபட்டவர்களை இல்லா தொழித்த பாதுகாப்புத் துறையினரை சர்வதேச நீதிமன்ற விசாரணைகளுக்கு உட்படுத்த முயற்சிக்கப்படுமானால் அதனை நாம் எதிர்ப்போம் என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

இலங்கையில் பாரதூரமான பிரிவினைவாத யுத்தம் நடைபெற்றது. பல தலைவர்களைக் கொல்வதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டதோடு சிலர் கொல்லப்பட்டனர்.

எனவே இவ்வாறான அடிப்படைவாதிகளை அழிப்பதற்கு பாதுகாப்புத் துறையினர் முன்னெடுத்த முயற்சிகளை குற்றங்களாகக் குறிப்பிட்டு சர்வதேச நீதிமன்றத்தில் விசாரிப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை.

ஆனால் ஏதேனுமொரு நபர் தனிப்பட்ட ரீதியில் குற்றச் செயலில் ஈடுபட்டிருந்தால் அவர் எந்த நிலையிலிருந்தாலும் அது தொடர்பில் உள்நாட்டு நீதித்துறை நடவடிக்கை எடுக்க முடியும். எனவே அரசாங்கம் மாத்திரமல்ல, நாமும் இவ்வாறான சர்வதேச விசாரணைகளை எதிர்க்கின்றோம்.

பிரபாகரனைத் தொடர்ந்து வந்த விடுதலைப் புலிகள் அமைப்பினர் தலைவர், அதன் அங்கத்தவர்கள் சுதந்திரமாக நடமாடுகின்ற நிலையில், சிறு சிறு குற்றங்களால் விடுதலைப் புலிகள் அமைப்பிலுள்ள சிலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை எந்தளவுக்கு அறிவுபூர்வமானது என்பது தெளிவாகிறது.

எனவே 12 வருடங்களுக்கு முன்னர் நிறைவடைந்த யுத்தத்தை மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருக்காமல் அனைத்தையும் மறந்து சகலருக்கும் பொது மன்னிப்பு வழங்கி முன்னோக்கிச் செல்ல வேண்டும்- என்றார்.

(எ)



# குவைத்தில் கைவிடப்பட்ட இலங்கை பணிப்பெண்கள்

குவைத்,பெப்.06

குவைத்திலுள்ள இலங்கைப் பணிப் பெண்கள் நாடு திரும்ப முடியாமல் அவதிப்பட்டு வருகின்றனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

கவனிப்பாரற்ற நிலையிலும், கொரோனாவால் தொழில் வாய்ப்பு இழந்த நிலையிலும் சொந்த நாட்டுக்குத் திரும்ப முடியாமல் பல நாள்களாக அகதிகள் போன்று வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு முன்பு இவர்கள் காத்துக்கிடப்பதாகக் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனினும் குவைத்துக்கான இலங்கைத் தூதரகம் இவர்களைக் கண்டுகொள்ளாது கைவிட்டிருப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் பொருளாதாரத்தின் முக்கிய பங்காளிகளான வெளிநாட்டு வீட்டுப் பணிப் பெண்களின் இந்த அவலநிலை கவலையளிப்பதாக பலரும் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர். (எ)

# 14,000 பட்டதாரிகளை இணைக்க நடவடிக்கை



கொழும்பு,பெப்.06

அரச சேவையில் மேலும் 14 ஆயிரம் பட்டதாரிகள் இம்மாத இறுதிக்குள் இணைத்துக் கொள்ளப்பட வுள்ளனர் என அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள் ளார்.

2019 ஆம் ஆண்டு பட்டதாரிப் பயிலு நர்களாக இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளை அரச சேவையில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக்கொள்வது தொடர்பில் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் அதிகாரிகளுடன் கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் அமைச்சர் இவ் வாறு குறிப்பிட்டார். (எ)

# கோழிகளை கொண்டு சென்ற கான்ஸ்டபிள் கைது

கொழும்பு,பெப்.06

கொழும்பில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர், கோழிப் பண்ணையிலிருந்து வலுக்கட்டாயமாக இரு கோழிகளை கொண்டு சென்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் வீரவில பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திஸ்ஸமஹராம, கங்காசிறிபுரவில் உள்ள கோழிப் பண்ணை உரிமையாளரிடமிருந்து வந்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# எதிர்க்கட்சியில் பிரபலமானவர்களின் பிரஜா உரிமையை நீக்க திட்டம்



கொழும்பு,பெப்.06

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய அடுத்த தேர்தலுக்கு முன்னர் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளில் பிரபலமானவர்களின் பிரஜா உரிமையை இல்லாமல் செய்து ஏகாதிபத்தியத்துக்கான வழி அமைப்பதே அரசாங்கத்தின் திட்டமாகும். அத்துடன் முறைப்பாட்டாளர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டி ருப்பதானது, பிரபல்யமாக பேசப்படம் கெகில்லே மன்னரது ஆட்சியில்கூட பதிவானதில்லை என முன்னாள் சபாநாயகரும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரை தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

கடந்த வாரம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை சமூகமயப்படுத்தப்பட்டிருக்கும் அறிவிப்புக்களுக்கமைய, அந்த அறிக்கையானது நீதிமன்றத்துக்கு செய்யும் அவமானமாகும் என்பதே அதிகமான சட்டத்துறை சார்ந்த நிபுணர்களின் நிலைப்பாடாகும். ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை மூலம் இந்த நாட்டில் முன்னணி அரசியல்வாதிகள் உட்பட கடமைகளை நேர்மையாக மேற்கொண்ட சில அரச அதிகாரிகளை அழித்துவிடும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதை எம்மால் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

மேலும் இந்த ஆணைக்குழு வழங்கியிருக்கும் பரிந்துரைகள் மக்கள் மத்தியில் நகைச்சுவையாகி இருக்கின்றன. அதில் சில பரிந்துரைகளில், நீதிமன்றங்களில் தற்போது விசாரிக்கப்பட்டுவரும் பல வழக்குகளின் குற்றவாாளிகளை விடுவித்து விடுதலை செய்வதற்கு பரிந்துரை செய்து, முறைப்பாட்டாளர்களுக்குத் தண்டனை வழங்குவதற்கும் பிரேரித்திருக்கின்றது - என்று குறிப்பிட்டுள்ளார்.

# விதிமுறைகளை மீறிய மேலும் 16 பேர் கைது

கொழும்பு,பெப்.06

முகக்கவசம் அணியத்தவறிய மற்றும் கொரோனா சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றத்தவறிய குற்றச்சாட்டுக்களின் பேரில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதிக்குள் 16 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் மொத்தம் 2,997 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பிரதிப் பொலிஸ் மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேலும் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறுகின்றவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன- என்றார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

(எ)



## லொக்கா மரணம்: இலங்கையிடம் இந்தியா உதவி

கொழும்பு,பெப்.06

இந்தியாவில் உயிரிழந்ததாகக் கூறப்படும் மத்தும லசந்த சந்தன பெரேரா எனும் அங்கொடை லொக்கா என்பவரின் சடலம் உண்மையில் அவருடையதா? என்பதை உறுதி செய்வதற்கு இந்திய தேசிய விசாரணைப் பிரிவு இலங்கையிடம் உதவி கோரியுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அங்கொடை லொக்காவின் நெருங்கிய உறவினர் ஒருவரின் மரபணு மாதிரியை அனுப்பி வைக்குமாறு இந்திய அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் குறிப்பிட்டார்.

களுத்துறை, எதனமடல பகுதியில் சிறைச்சாலை பேருந்தின் மீது தாக்குதல் நடத்திய தன் பின்னர் அங்கொடை லொக்கா இந்தியாவுக்குத் தப்பிச் சென்றுள்ளார் எனத் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது - என்றார். (எ)

*1000 ரூபா சம்பள விவகாரம்:*

# நாடளாவிய ரீதியில் நேற்று பணிப் புறக்கணிப்பு போராட்டம்

*முற்றாக முடங்கியது மலையகம்*

ஹற்றன், பெப். 06

**பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபாயாக அதிகரிக்குமாறு கோரி நாடளாவிய ரீதியில் ஒருநாள் அடையாளப் பணிப் புறக்கணிப்புப் போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. இதனால் மலையகத்தின் பல பகுதிகள் முற்றாக முடங்கின.**

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் இந்த அடையாளப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள தொழிற்சங்கங்களுக்கும், பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துக்கும் இடையே பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் தொடர்பில் இடம்பெற்ற பல சுற்றுப்பேச்சுக்களிலும் இணக்கம் ஏற்பட்டிருக்கவில்லை.

அதனைத் தொடர்ந்து தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் இடம்பெற்ற பேச்சுக்களிலும் எந்தவொரு சாதகமான தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை.

ஆகவே பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு குறித்த விடயத்தை தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, சம்பள நிர்ணய சபையிடம் ஒப்படைத்துள்ளார்.

இந்நிலையில் இன்று சம்பள நிர்ணய சபையில் இடம்பெறவிருந்த பேச்சுவார்த்தை நாளை மறுதினம் 8 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இத்தகையதொரு சூழ்நிலையிலேயே இ.தொ.கா.வின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான், அதன் ஆரம்பகட்டமாக முதலாளிமார் சம்மேளனத்துக்கும் சம்பள நிர்ணய சபைக்கும் அரசாங்கத்துக்கும் ஒரு அழுத்தம் கொடுக்கும் முன்னோடி ஏற்பாடாக நேற்று அமைதியான ஒரு நாள் பணிப்பகிஷ்கரிப்பை நடத்த அழைப்பு விடுத்திருந்தார்.





இந்நிலையில் மலையகத்தின் பெரும்பாலான பகுதிகளில் நாளாந்த வேதனத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு கோரி ஒருநாள் அடையாளப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (எ)

## பாராளுமன்ற ஆசன விடயத்தில் ரஞ்சனுக்கு தற்காலிக நிவாரணம்

கொழும்பு,பெப்.06

ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற ஆசனம் தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையையும் எடுப்பதைத் தவிர்க்குமாறு மேன் முறையீட்டு நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 12 ஆம் திகதி வரை இதுதொடர்பில் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள வேண்டாம் என பாராளு மன்ற பொதுச் செயலாளருக்கு நீதிமன்றம் நேற்று அறிவுறுத்தியுள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் ரஞ்சன் நாமநாயக்கவுக்கு நான்கு ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (எ)

## ரவி கருணாநாயக்க, அலோசியஸுக்கு எதிராக நேற்று குற்றப்பத்திரம் தாக்கல்

கொழும்பு,பெப்.06



இலஞ்சக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் பேர்பெச்சுவல் ட்ரெசரீஸ் நிறுவனத்தின் தலைவர் அர்ஜூன் அலோசியஸ் ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல் நீதி மன்றில் நேற்று குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பின்னர் இந்த இருவரும் தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணையிலும், தலா 50 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையிலும் செல்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அனுமதியளித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நிதியமைச்சராகச் செயல்பட்டு, வழக்கின் இரண்டாவது பிரதிவாதியான அர்ஜூன் அலோசியஸின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த மொனார்க் அடுக்குமாடி குடியிருப்பில் வசித்தமையின் மூலம் கையூட்டல் சட்டத்தின் கீழ் குற்றம் இழைக்கப்பட்டுள்ளது என ரவி கருணாநாயக்க மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது. (எ)

# தொல்பொருள் சின்னங்கள் திட்டமிட்டு அழித்தொழிப்பு

*விசாரணை ஆரம்பம் என்கிறார் விதுர*

கொழும்பு,பெப்.06

தேசிய மரபுரிமைகளை அடையாளப்படுத்தும் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இலங்கையின் தேசிய மரபுரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கம் உரிய கவனம் செலுத்தியுள்ளது.

தொல்பொருள் சின்னங்கள் திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுகின்றமை தொடர்பில் உரிய விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என தேசிய மரபுரிமைகள், கலை கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

கல்முதுர பகுதியில் நேற்று முன்தினம் தொல்பொருள் சின்னங்களைப் பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

நாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் தேசிய மரபுரிமைகள் காணப்படுகின்றன. மறைக்கப்பட்டுள்ள தேசிய மரபுரிமைகளை அடையாளப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை முதன்மையாகக் கொண்டு முன்னெடுக்கப்படுகின்றன. நாடுதழுவிய ரீதியில் அகழ்வாராய்ச்சிப் பணிகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் பாதுகாப்புச் சட்டம் மாத்திரமே தற்போது நடைமுறையில் உள்ளது. இந்தச் சட்டத்தால் மாத்திரம் தேசிய மரபுரிமைகளைப் பாதுகாக்க முடியாது.

ஆகவே தேசியமரபுரிமைச் சட்டத்தை பாராளுமன்றில் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சிகிரியா குன்று, தலதாமாளிகை ஆகியவை உலக மரபுரிமையாகக் காணப்படுகிறதே தவிர தேசிய மரபுரிமையாக அடையாளப்படுத்தப்பட வில்லை. இவற்றை தேசிய மரபுரிமையாக அடையாளப்படுத்துவதே அரசாங்கத்தின் பிரதான இலக்கு.

தேசிய மரபுரிமைகளைப் பாதுகாக்க நாட்டு மக்கள் அனைவரும் பொறுப்புடன் செயல்பட வேண்டும். இவ்விடயத்தில் அரசியல் காரணிகளை முன்னிலைப்படுத்த முடியாது.

தேசிய மரபுரிமைகளையும், நாட்டின் தனித்துவத்தையும் உலகத்துக்கு அடையாளப் படுத்துவோம். கடந்த அரசாங்கம் தேசிய மரபுரிமைகளைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த மாதம் தொல்பொருள் ஆராய்ச்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதற்கு எதிராக தமிழ் அரசியல்வாதிகள் சட்டநடவடிக்கை முன்னெடுக்கவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்துச் சவால்களையும் வெற்றி கொள்ளத் தயாராகவுள்ளோம். தொல்பொருள் சின்னங்களைப் பாதுகாக்கும் விடயத்தில் எந்தவிதமான மக்களின் மத மற்றும் இன உரிமைகளும் பாதிக்கப்படவில்லை என்பதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்- என்றார். (எ)



# எட்னா எரிமலை வெடித்தது!

ரோம், பெப். 06

இத்தாலியின் பிரபல எரிமலையான எட்னா நெருப்புக் குழம்பை கக்க ஆரம்பித்துள்ளது.

இத்தாலி நாட்டில் உள்ள சிசிலி நகரில் அமைந்துள்ளது எட்னா எரிமலை. இது ஐரோப்பாவின் மூன்று பெரிய எரிமலைகளில் ஒன்றாகும். இது புகழ்பெற்ற சுற்றுலா தளமாகவும் விளங்கி வருகிறது.

இந்த நிலையில் எட்னா எரிமலை கடந்த மாத இறுதியில் புகை கக்கத் தொடங்கியது. தற்போது இந்த எரிமலையின் முகப்பு பகுதியில் இருந்து 'லாவா' எனப்படும் நெருப்புக் குழம்பையும், சாம்பலையும் வெளியிட்டு வருகிறது. இதன் சுற்றுப்புறத்தில் உள்ள ஊர் மக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டு விட்டனர்.

இரவு நேரங்களில் எரிமலையில் இருந்து நெருப்பு சுவாலைகள் வெடித்துக் கிளம்பும் ஆபத்தான அழகை தூரத்தில் இருந்தபடி சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து வருகின்றனர். இன்னும் சில நாட்கள் எரிமலை வெடிப்பு தொடரக்கூடும் என்பதால் அந்த பகுதிக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கடும் குளிர், மழையில் விவசாயிகள் போராட்டம்



புதுடில்லி, பெப். 06

இந்தியாவின் டில்லியில் இரவு நேரங்களில் உறைய வைக்கும் குளிர் வாட்டுகிறது. அத்துடன் அதிகாலை நேரத்தில் அவ்வப்போது மழைத்தூறலும் காணப்படுகின்றது.

இந்த சவால்களுக்கு மத்தியிலும் இந்திய அரசின் வேளாண் சட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து 72ஆவது நாளாக விவசாயிகள் மிகுந்த உறுதியுடன் தங்கள் போராட்டத்தை தொடர்கின்றனர்.

குறிப்பாக டில்லியின் காஜிப்பூர் எல்லையில் குவிந்துள்ள பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் தங்கள் உழவு இயந்திரங்களிலும், தறப்பாள் கூடாரங்களிலும், சிலர் வெறும் வீதிகளிலும் நித்திரை கொள்கின்றனர்.

இதற்கிடையே காஜிப்பூர் எல்லையில் போராட்டக் களத்தை சுற்றி பொலிஸார் அமைத்திருந்த இரும்பு ஆணி வேலிகளை அகற்றி வருகின்றனர். இது தொடர்பான வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகின.

இந்த வேலிகளை அகற்றுவதை போல, வேளாண் சட்டங்களையும் அரசு அகற்றி விடும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

ஆனால், போராட்டக்களங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் வழக்கம்போல இருக்கும் என்றும், அங்கு வேலிகளை மாற்றியமைக்கவே ஆணி வேலிகள் அகற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், மோசமான வானிலையும், பொலிஸாரின் கடும் நடவடிக்கைகளையும் தாண்டி விவசாயிகளின் போராட்டம் தொடர்கின்றது. (ஐ)

# ரஷ்யா, சீனாவை கையாள்வதற்கு அமெரிக்கா வேறு அணுகுமுறை

வாஷிங்டன், பெப். 06

ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளால் ஏற்படவுள்ள சவால்களை சமாளிப் பதற்காக மாறுபட்ட அணுகுமுறைகளைக் கையாள்வ தற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

அமெரிக்காவில் ஜனாதிபதி ஜோ பைடன் தலைமையிலான புதிய நிர்வாகம் பொறுப்பேற்றுள்ளது. சர்வதேச விவகாரங்களை இந்த நிர்வாகம் எவ்வாறு கையாளும் என்பதில் பல்வேறு எதிர்பார்ப்புகள் நிலவுகின்றன. முக்கியமாக, அமெரிக்காவின் போட்டி நாடுகளான ரஷ்யாவை யும் சீனாவையும் பைடன் நிர்வாகம் எவ்வாறு எதிர்கொள்ளும் என்று பலர் கணித்து வந்தனர்.

இத்தகைய சூழலில், வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பா ளர் ஜென் சாகி தலைநகர் வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் புதன்கிழமை கூறுகையில், "சீனாவுட னான அணுகுமுறையில் அமெரிக்காவின் நட்பு நாடுகளுடன் கலந்தாலோசித்து, அதற்கேற்ப ஜனாதிபதி பைடன் நிர்வாகம் செயல்படும்.

வலுவான நிலையிலிருந்து சீனாவை எதிர்கொள்ள வேண்டு மென அமெரிக்கா கருதுகிறது.

பொருளாதாரம் உள்ளிட்ட விவகாரங்களைக் கருத்




தில் கொண்டு அதில் முடிவெடுக்க வேண்டியுள்ளது.

இதேவேளை, ரஷ்யாவுடன் பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன், ஜனாதிபதி பைடன் உரையாடிய போது இதே கருத்தையே முன் மொழிந்தார்.

ரஷ்யா மீதான பொருளாதாரத் தடை உள்ளிட்ட சில விவகாரங் களில் இரு நாடுகளுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. அவற்றைத் திறம் பட எதிர்கொள்வதற்கு திட்ட வகுப்புக் குழு உதவும்" என்றார்.(ஐ)



# மாரடைப்பால் துடித்த எஜமானரை காத்த நாய்!

நியூயோர்க், பெப். 06

மாரடைப்பால் துடித்த தனது எஜமானரின் கைபேசியை அவர் வளர்த்த நாய் நகர்த்திக் கொண்டு வந்து கொடுத்தது. இதனால் அவர் உடனடியாக அவசர அழைப்பை மேற்கொண்டு உதவி பெற உதவியுள்ளது.

நாய் எப்போதும் மனிதர்களின் நண்பன் என்பது இந்த சம்பவம் மூலம் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்ல, மாரடைப்பால் துடித்த தனது எஜமானரை விட்டுச் செல்லாமல், அவரது முகத்தை நாக்கால் தடவிக் கொடுத்து அவரை விழிப்புடன் இருக்கச் செய்துள்ளது அவர் வளர்த்து வந்த ஜேர்மன் ஷெப்பர்ட் நாயான ஸேடி.

அமெரிக்காவின் நியூ ஜெர்ஸியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது குறித்த தகவல்கள் சமூக வலைத்தளங்களில் பரவியதை அடுத்து, பாராட்டுகளும் வாழ்த்துகளும் குவிந்து வருகின்றன.

# யேமன் போர் கூட்டணி: விலகியது அமெரிக்கா!

## ஜனாதிபதி பைடன் அறிவிப்பு



வாஷிங்டன், பெப். 06

யேமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக போரிட சவுதி அரேபியா தலைமையிலான கூட்டணி இராணுவத்துக்கு வழங்கிய ஆதரவை நிறுத்துவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

யேமனில் கடந்த 2014ஆம் ஆண்டு அரசுக்கும் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே போர் தொடங்கியது. ஜனாதிபதி ஒபாமா காலத்தில், இந்தப் போரில் அமெரிக்காவும் பங்காளியானது. தவிர, சவுதி அரேபியா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளுடன் 8 பிற அரபு நாடுகளும் போரில் ஈடுபட்டுள்ளன.

இந்தப் போரில் இதுவரை ஒரு இலட்சத்து 10 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். பல இலட்சம் மக்கள் வறுமையில் சிக்கியுள்ளனர்.

இந்நிலையில், ட்ரம்ப் ஆட்சிக் காலத்தில் இருந்த வெளியுறவுக் கொள்கைகளின் மாற்றங்களை ஏற்படுத்தி வரும் ஜோ பைடன், யேமன் போர் நிறுத்தப்பட வேண்டும் என்று தனது கொள்கை விளக்க உரையில் தெரிவித்திருந்தார்.

தற்போது, சவுதி அரேபியா தலைமையிலான கூட்டணிக்கு வழங்கி வந்த ஆதரவை அமெரிக்கா நிறுத்துவதக ஜோ பைடன் அறிவித்துள்ளார். அமெரிக்காவின் இந்த புதிய முடிவை மேற்குலக நாடுகளின் இராஜதந்திரிகள் மற்றும் யேமன் மக்கள் வரவேற்றுள்ளனர். (ஐ)

# இந்தியாவில் ஐந்தில் ஒருவர் தொற்றுக்கு இலக்காகினர்!

புதுடில்லி, 06

இந்தியாவில் கொவிட் -19 தொற்று நோய் உச்சத்தில் இருந்த போது நாட்டு மக்களில் ஐந்தில் ஒருவர் கொரோனா வைரஸுக்கு இலக்காகியிருந்தனர் என்று ஆய்வு முடிவில் அதிர்ச்சித் தகவல் வெளி யாகியுள்ளது.

இந்தியாவின் மொத்த சனத் தொகையில் 21 வீதமான வர்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டு குண மடைந்திருக்கலாம் என்றும் அந்த ஆய்வு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் ஒருவருக்கு கடந்த காலத்தில் கொரோனா பாதிப்பு ஏற்பட்டதா? என்பதைக் கண்டறிய ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

ஒருவர் தொற்றுக்கு இலக்காகி குணமடைந்தமையால் அவரின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை கண்டு பிடிக்க முடியும். இதை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு கடந்த, டிசெம்பர் 7ஆம் திகதி முதல் ஜனவரி 8ஆம் திகதி வரையில் 10 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினர் மத்தியில் மேற்கொள்ளப்பட்டது.

இந்தியா முழுவதும் 21 மாநிலங்களில் 70 மாவட்டங்களில், 700 கிராமங்களில் பரிசோதனை நடத்தப்பட்டது.

இதுகுறித்த முடிவுகளை இந்திய மருத்துவ ஆராய்ச்சி பேரவைத் தலைவர் டொக்டர் பலராம் பார்கவா வெளியிட்டுள்ளார். அதில், இந்தியாவில் ஐந்தில் ஒருவருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருந்ததற்கான ஆதாரம் தெரிய வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

18 வயதுக்கு மேல் 28 ஆயிரத்து 589 பேரிடம் நடத்தப்பட்ட ஆய் வில் 21.4 வீதம் பேரும், 10 முதல் 17 வயதுக்கு உட்பட்டோரிடம் நடத்தப்பட்ட ஆய்வில் 25.3 வீதம் பேரும் தொற்றுக்கு ஆளாகி குணமடைந்தமை தெரியவந்துள்ளது. நகர்ப்புற குடிசைப்பகுதிகளில் 31.7 வீதத்தினருக்கும், குடிசைகள் அற்ற பகுதிகளில் 26.7 வீதத்தினரும், கிராமப் புறங்களில் 23.4 வீதத்தினருக்கும் தொற்று ஏற்பட்டுள்ளதாகவும் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழநாடு



# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்: வலுவான நிலையில் இங்கிலாந்து

## நூறாவது போட்டியில் ரூட் சதம்



சென்னை, பெப். 06

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் நாளான நேற்று இங்கிலாந்து அணி 3 விக்கெட் இழப்புக்கு 263 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இந்தியாவுக்கு சென்றுள்ள இங்கிலாந்து அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இதன் முதல் போட்டி நேற்று சென்னை சேப் பாக்கம் மைதானத்தில் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோ ரூட் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதன்படி, அந்த அணியின் றொறி பேர்ன்ஸ், டோம் சிப்லி ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர். இந்த இணை சிறப்பான தொடக்கத்தை ஏற்படுத்தியது. எனினும், பேர்ன்ஸ் 33 ஓட்டங்களுடன் அஸ்வினின் சுழலில் விக்கெட் காப்பாளர் ரிஷப் பந்திடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

அடுத்துக் களமிறங்கினார் டான் லோரன்ஸ் 5 பந்துகளே தாக்குப் பிடித்த அவர் பும்ராவின் பந்தில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்து சென்றார்.

மறுமுனையில், சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சிப்லி 159 பந்துகளை சந்தித்து 50 ஓட்டங்களை எடுத்தார். இது அவரது நான்காவது அரைச்சதமாகும்.

அவருடன் களத்தில் நின்ற ஜோ ரூட் அதிரடியாக ஆடினார். 110 பந்துகளில் அரைச்சதத்தை எட்டினார் அவர். அதேவேகத்தில் அடித்தாடிய அவர் 164 பந்துகளில் சதமடித்தார். இது அவரின் 20ஆவது சதமாகும். நூறாவது போட்டியில் சதம் அடித்த வீரர் என்ற பெருமையையும் இதன் மூலம் அவர் பெற்றார்.

தொடர்ந்த ஆட்டத்தில் 87 ஓட்டங்களை எடுத்த டோம் சிப்லி பும்ராவின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் வெளியேறினார்.

மூன்றாவது விக்கெட் இழப்புடன் முதல்நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இதன்போது இங்கிலாந்து அணி 89.3 ஓவர்களை சந்தித்து 3 விக்கெட்கள் இழப்புக்கு 263 ஓட்டங்களை பெற்றிருந்தது.

ஜோ ரூட் 128 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழக்காமல் உள்ளார்.

இந்திய அணியின் பந்து வீச்சில் பும்ரா 2 விக்கெட்களையும், அஸ்வின் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார். (ஐ)



# “மன்னித்து விடு மரியா” மன்றாடும் இந்திய ரசிகர்கள்

சென்னை, பெப். 06

விவசாயிகளின் போராட்டம் குறித்து கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்த கருத்தால் இந்திய ரசிகர்கள் கோபமடைந்துள்ளனர். இதனால், அவர்கள் ரஷ்யாவின் ரென்னிஸ் வீராங்கனை மரிய ஷெரபோவாவின் ருவிட்டர் பக்கத்தில் மன்னிப்பு கேட்டு வருகின்றனர்.

கடந்த 2015ஆம் ஆண்டு, ரென்னிஸ் வீராங்கனை மரிய ஷெரபோவா, தனக்கு சச்சின் டெண்டுல்கர் யாரென்று தெரியாது எனத் தெரிவித்திருந்தார். இதற்கு இலட்சக்கணக்கான ரசிகர்கள் அவருக்குக் கண்டனம் தெரிவித்திருந்தார்கள்.

ஆனால், தற்போது விவசாயிகள் போராட்டத்துக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்த வெளிநாட்டு பிரபலங்களுக்கு எதிராக சச்சின் டெண்டுல்கர் கருத்து தெரிவித்திருந்தார்.

இதனால் சச்சின் மீது கோபமடைந்த ரசிகர்கள் அவரை கடுமையாக சமூக வலைதளங்களில் விமர்சித்து வருகின்றனர். இதன் ஒரு வெளிப்பாடாக மரியா ஷெரபோவாவிடம் நடந்துகொண்ட முறைக்கு அவர்கள் மன்னிப்பு கோரியுள்ளனர்.

இதன்போது, ஒருவர் பதிவிட்ட கருத்தில், “ஷெரபோவா, நீங்கள் சச்சினைப் பற்றி சரியாகத்தான் கூறியுள்ளீர்கள். தரமான மனிதர் இல்லை என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கிறது” என்று பதிவிட்டுள் ளார்.

இன்னொருவர்,‘ மன்னித்துக் விடு மரியா. நீங்கள் பெரிய அறிவாளி. சச்சினை எங்களுக்கு வீரராகத்தான் தெரியும். ஆனால், ஒரு மனிதராகத் தெரியாது. ஆனால், நீங்கள் சரியாகத்தான் கணித்தீர்கள். உங்களைத் தவறாகப் பேசியதற்கு மன்னிக்கவும்” எனத் தெரிவித்திருந்தார்.

ஆயிரக்கணக்கானவர்கள் தனது பதிவில் தன்னிடம் மன்னிப்பு கேட்பதை அறிந்த ஷெரபோவா ருவிட்டரில், “யாருக்கேனும் ஆண்டுகள் பற்றி ஏதேனும் குழப்பம் வந்துவிட்டதா” எனக் கேட்டுள்ளார். (ஐ)



# 12 பந்துகளில் அரைச்சதம் விளாசினார் கிறிஸ் கெய்ல்!

அபுதாபி, பெப். 06

அபுதாபி பத்து - 10 ஓவர் போட்டியில் 12 பந்துகளில் அரைச்சதம் விளாசி அசத்தினார் கிறிஸ் கெய்ல்.

அபுதாபியில் பத்து - 10 தொடர் நடக்கிறது. இதன் லீக் ஆட்டத்தில் அபுதாபி, மரத்தா அராபியன் அணிகள் நேற்று முன்தினம் இரவு மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற அபுதாபி அணி களத்தடுப்பில் ஈடுபட்டது.

முதலில் ஆடிய மரத்தா அராபியன் அணிக்கு அலிஷான் 33 ஓட்டங்கள், முஹமது ஹபீஸ் 20 ஓட்டங்கள் எடுத்துக் கைகொடுக்க, 10 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 97 ரன்கள் எடுத்தது.

அபுதாபி அணிக்கு கெய்ல், பவுல் ஸ்டெர்லிங் இணை தொடக்கம் கொடுத்தது. யாமின் ஓவரில் ‘ஹட்ரிக்’ பௌண்டரி, சோம்பால் ஓவரில் ‘ஹட்ரிக்’ சிக்ஸர் என்று விளாசிய கெய்ல் 12 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். ஸ்டெர்லிங் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கடைசியில் கெய்ல் ஒரு சிக்ஸர் அடிக்க, அபுதாபி அணி 5.3 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 100 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. கெய்ல் 22 பந்துகளில் 84 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

பத்து - 10 போட்டியில் குறைந்த பந்தில் அரைச்சதம் அடித்த வீரர்களில் முஹமது ஷாஜத் (2018) சாதனையை சமன் செய்தார் கெய்ல். இருவரும் தலா 12 பந்துகளில் அரைச்சதம் அடித்துள்ளனர். (ஐ)

# அவுஸ்திரேலிய ஓப்பன் நடால் ஆடுவது சந்தேகம்!

மட்ரிட், பெப். 06

ஸ்பெயினின் நடால், முதுகு வலி காரணமாக அவுஸ்திரேலிய ஓப்பனில் பங்கேற்பது சந்தேகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயினின் ரென்னிஸ் வீரர் ரபெல் நடால். உலகின் ‘நம்பர்2’ வீரரான இவர், இதுவரை 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார்.

நாளை மறுதினம் தொடங்கவுள்ள நடப்பு ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லம் தொடரான அவுஸ்திரேலிய ஓப்பனில் பங்கேற்கவுள்ளார்.

இதற்காக மெல்பர்னில் நடக்கும் ஏ.ரி.பி. கிண்ணத்தில் ஸ்பெயின் அணிக்காக பங்கேற்க இருந்தார். ஆனால், அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டியில் முதுகு வலி காரணமாக விலகினார். இன்னும் வலி இருப்பதால் முழு உடற்தகுதி பெறுவதில் இழுபறி ஏற்பட்டுள்ளது. இதனால் இவர், அவுஸ்திரேலிய ஓப்பனில் பங்கேற்பது சந்தேகம் என்று கூறப்படுகிறது.

இதுகுறித்து நடால் கூறுகையில், “எனது காயம் மிகவும் மோசமாக உள்ளது என்று கூற முடியாது. ஆனால், என்னால் விளையாட முடியும் என்று கூற முடியாத நிலையில் இருக்கிறேன்,” என்றார்.

# 4,168 கோடி ரூபா சம்பாதித்தார் கோலி



புதுடில்லி, பெப். 06

விம்பரம் மூலம் 4,168 கோடி ரூபாவை கடந்த ஆண்டு மட்டும் சம்பாதித்துள்ளார் விராட் கோலி.

உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரராக கொண்டாடப்படுபவர் விராட் கோலி. இவர் விளம்பரங்கள் மூலம் பல கோடிகள் சம்பாதித்து வருகின்றார்.

இந்தியளவில் பிரபலமான அவரை விளம்பர நிறுவனங்கள் அவரை போட்டி போட்டுக்கொண்டு ஒப்பந்தம் செய்து வருகிறார்கள். 30இற்கும் மேற்பட்ட விளம்பர நிறுவனங்கள் அவர் வசம் இருக்கிறது.

இந்த நிலையில் 2020ஆம் ஆண்டுக்கான இந்திய பிரபலங்களில் மதிப்புமிக்கவர்களின் பட்டியல் வெளியாகி உள்ளது. இதன்படி விளம்பர வருமானம் மூலம் விராட் கோலி 1737 கோடி ரூபா - நம் நாட்டு மதிப்பில் சுமார் 4,168 கோடி ரூபா சம்பாதித்து முதல் இடத்தில் உள்ளார்.

கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றுவிட்ட இந்திய அணியின் முன்னாள் தலைவர் டோனி 2 இடங்கள் பின்தங்கியுள்ளார். அவர் விளம்பரங்கள் மூலம் 262 கோடி ரூபா - சுமார் 628 கோடி ரூபா சம்பாதித்துள்ளார். (ஐ)

# பரு. நீதிமன்ற எல்லைக்குள் பேரணிகள் நுழைய தடை

யாழ்ப்பாணம்,பெப்.06

**பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான அஹிம்சை வழிப் போராட்டம் ஆரம்பமாகியுள்ள நிலையில் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் நேற்று முதல் நான்கு நாள்களுக்கு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகளை நடத்த பொலிஸார் தடை உத்தரவு பெற்றுள்ளனர்.**

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் பருத்தித்துறை, நெல்லியடி மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பத்துக்கே இந்தத் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

பொதுத் தொல்லையை ஏற்படுத்தல், கொரோனா சுகாதார நடைமுறைகளை மீறுதல் உள்ளிட்ட சட்ட ஏற்பாடுகளின் கீழ் இந்த விண்ணப்பங்கள் பொலிஸாரால் தனித்தனியே தாக்கல் செய்யப்பட்டன.

பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா தலைமையிலான சட்டத்தரணிகள் முன்னிலையாகி கடும் ஆட்சேபனையை வெளிப்படுத்தினர்.

இருதரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் காயத்திரி சைலவன், பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்று தடை உத்தரவு வழங்கிக் கட்டளை வழங்கினார்.

பேரணியில் பங்கேற்போர் பல மாவட்டங்கள் ஊடாக அங்குள்ளவர்களையும் இணைத்து வருவதனால் கொரோனா நோய்த் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது எனவே இந்தத் தடை உத்தரவு வழங்கப்படுகிறது என்று நீதிவான் கட்டளையில் சுட்டிக்காட்டினார்.

தமிழ் பேசும் மக்களின் பூர்வீக நிலங்கள் உட்பட இலங்கை முழுவதும் திட்டமிட்டு நடத்தப்படும் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு வடக்கு - கிழக்கு தமிழ் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள், பல்சமய ஒன்றியங்கள் இணைந்து அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தக் கோரியும் மலையக தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை ஆயிரம் ரூபாயாக உயர்த்தக் கோரியும் முஸ்லிம் மக்களின் மத நம்பிக்கைகளை மதிக்கக் கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. (எ)

# சிங்கள மக்களுக்கு எதிராக நாம் பேரணி நடத்தவில்லை

## சுமந்திரன் எம்.பி. விளக்கம்

திருகோணமலை,பெப்.06

சிறுபான்மை மக்கள் தங்களது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக முன்னெடுக்கப் பட்ட பேரணியேயன்றி சிங்களப் பெரும்பான்மை மக்களுக்கு எதிரான பேரணியல்ல என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி நேற்றுக்காலை திருகோணமலையில் ஆரம்பமானது. இதில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

சிறுபான்மை மக்களுக்கு எதிராக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கையைக் கண்டித்தும் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவே இந்தப் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேரணி பெரும்பான்மை மக்களுக்கு எதிரானது அல்ல என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்நாட்டில் சிங்கள பௌத்த மக்களுக்கு இருக்கும் சகல உரிமைகளும் தமிழ் பேசும் மக்களாகிய எங்களுக்கும் உண்டு. ஏனெனில் நாங்களும் இந்நாட்டின் குடிமக்கள் என்றாலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சுதந்திர தின நிகழ்வில் பேசும்போது தான் சிங்கள பௌத்தன் என்று தெரிவித்தார்.

அவர் அவ்வாறு கூறியது எங்களுக்குப் பிரச்னை இல்லை. எனினும் இந்நாட்டின் ஜனாதிபதி பெரும்பான்மை மக்களுக்கும் மாத்திரம் சேவையாற்றுவேன் என்று தெரிவிப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

எங்களுக்கும் இந்நாடு சொந்தமானது. நாங்களும் வசிக்கின்றோம். அதேபோன்று பெரும்பான்மை மக்களும் இந்நாட்டில் வசிப்பதற்கான உரிமை உள்ளது. எங்களின் உரிமைகளை அகற்ற முடியாது. இதனடிப்படையில் நாங்கள் இந்தப் பேரணியை மேற்கொள்கின்றோம்-என்றார். (எ)

# அரசியல் கைதிகளின் விடுதலைக்கான தேசிய இயக்கம் பேரணிக்கு ஆதரவு

வவுனியா,பெப்.06

தமிழர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதோடு பல்வேறு விவகாரங்கள் தொடர்பிலும் நீதி வழங்குமாறு வலியுறுத்தி நடத்தப்பட்டுவரும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணிக்கு ஆதரவு வழங்குவதாக அரசியல் கைதிகளின் விடுதலைக்கான தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அருள்தந்தை சக்திவேல் தெரிவித்துள்ளார்.



பொத்துவில் முதல் பொலிகண்டி வரையில் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்துக்கு நாம் எமது ஆதரவை வெளிப்படுத்தியிருக்கின்றோம். இதுவரை காலமும் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி, நாமும் மேலும் பல சிவில் சமூக அமைப்புக்களும் இணைந்து பல்வேறு விதமான போராட்டங்களை நடத்தியிருக்கிறோம்.

தற்போது இதற்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசியல்வாதிகளின் கைகளிலேயே உள்ளது.

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் விரைவில் ஆரம்பமாகவுள்ள நிலையில் கடந்த ஜனவரி மாதம் 25 ஆம் திகதி இலங்கைக்கான ஐ.நாவின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கரை சந்தித்து எமது பிரச்னைகளை எடுத்துரைத்தோம். இலங்கையில் சர்வதேச நாடுகள் மற்றும் ஐ.நாவின் தூதரகங்கள் இயங்கிய காலப்பகுதியிலேயே இனவழிப்பு நடைபெற்றது என்பதையும் எனினும் இவ்விடயம் தொடர்பில் ஐ.நாவில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் திருப்திகரமானவையாக இல்லை என்றும் சுட்டிக்காட்டினோம்.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி பல தடவைகள் கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் கடிதங்களைக் கையளித்த போதிலும் எவ்வித பதிலும் வழங்கப்படவில்லை.

மாறாக இந்த விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்தும் அமைதிகாத்து வந்திருப்பதன் மூலம் அவர்களும் ஆட்சியாளர்களுக்கு ஆதரவாகச் செயல்படுவது தெளிவாகின்றது என்றும் ஹனா சிங்கரிடம் கூறினோம்.

இந்நிலையில் எதிர்வரும் ஜெனிவா கூட்டத்தொடரின் போது தமிழர் விவகாரத்தில் அர்த்தமுள்ளதொரு மாற்றத்தை எதிர்பார்க்கின்றோம் என்று குறிப்பிட்டார். (எ)

# மாணவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாவதை தடுக்கத் திட்டம்

## பொலிஸ் பேச்சாளர் தகவல்

கொழும்பு,பெப்.06

பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாவதைத் தடுப்பதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சும், கல்வி அமைச்சும் இணைந்து விஷேட வேலைத்திட்டமொன்றைச் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகுவதைத் தடுப்பதற்கு திட்டங்களைத் தயாரிப்பது தொடர்பில் நேற்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் விசேட கலந்துரையாடலொன்று



இடம்பெற்றது.

நாட்டில் தற்போது 90 ஆயிரம் தொடக்கம் ஒரு இலட்சம் பேர் வரை போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர். இவர்களின் தொகை படிப்படியாக அதிகரித்துச் செல்வதையும் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

இந்நிலைமைக்கு பிரதான காரணம் இளம் வயதினர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி வருகின்றமையே.

இந்நிலையில் இளம் வயதினரை போதைப்பொருள் பாவனையிலிருந்து மீட்பதென்றால், பாடசாலை மட்டத்திலிருந்தே அவர்களுக்கு போதைப்பொருள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் என்று கலந்துரையாடப்பட்டது.

அதற்கமைய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சும், கல்வி அமைச்சும் இணைந்து பாடசாலை மட்டத்தில் ஒன்றிணைந்த வேலைத்திட்டமொன்றை செயல்படுத்த முடிவெடுத்துள்ளது.

இந்தச் செயல்பாடுகளுக்கு சாரணியர் அமைப்பினரும், இலங்கைச் செஞ்சிலுவை அமைப்பினரும்மற்றும்தேசிய மாணவர்படையணியினரும் ஒத்துழைப்பு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தலைமையில்இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது- என்றார். (எ)

# பொத்துவில் - பொலிகண்டி பேரணி வெற்றி பெறட்டும்

சென்னை,பெப்.06

திட்டமிட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி வேண்டி நடைபெறுகின்ற ஈழச்சொந்தங்களின் தொடர் போராட்டமும் பொத்துவில் முதல்பொலிகண்டிப் பேரணியும் வெற்றிபெறட்டும் என நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்: உள்நாட்டுப் போரில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைக் கேட்டு கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்பு நடைபெற்றுவரும் உண்



ணாவிரதப் போராட்டமும், பொத்துவிலில் தொடங்கியிருக்கும் பேரணியும் நம்பிக்கையைத் தருகிறது.

பேரினவாத ஆட்சியாளர்களின் கோர அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் நெஞ்சுரத்தோடு போராட்டத்தை முன்னெடுத்திருக்கும் ஈழச் சொந்தங்களைப் பெரிதும் போற்றுகின்றேன்.

தமிழர்களின் போராட்டங்களுக்குச் செவிசாய்க்காத இலங்கை அரசு இன்னும் அடக்குமுறைகளைத் தீவிரப்படுத்தியுள்ளதை அண்மைக்காலமாக ஈழத்தில் நடைபெறும் நிகழ்வுகள் நமக்கு உணர்த்துகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை முழுக்க இராணுவ மயமாக்குவது, தமிழர் காணிகளை ஆக்கிரமிப்பது, புதிய சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கி, பூர்வீகக்குடிகளான தமிழர்களின் இருப்பைக் குறைப்பது, பௌத்த விகாரைகளைப் புதிதாக நிறுவுவது, தமிழ் மக்களின் இன, மொழி, பண்பாடு ஆகியவற்றுக்கான வரலாற்று அடையாளங்களை முற்றிலுமாக அழிப்பது என மறைமுகமாகவும், நேரடியாகவும் அடக்குமுறைகளைத் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

இலங்கையின் சுதந்திர தினத்தைக் கறுப்பு நாளாகக் கடைப்பிடித்து, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களைக் கண்டுபிடித்துத் தரக்கோரி அவர்களது உறவுகளால் தொடங்கப்பட்டுள்ள நீதிக்கானஇப்போராட்டத்தைமுழுமையாக ஆதரிக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# குருந்தூர்மலையில் இருந்தது விகாரையே! தமிழர்களின் திரிசூலம் பின்னரே வந்தது!!

## சொல்கிறார் மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர்

கொழும்பு, பெப். 06

குருந்தூர் மலையில் பௌத்தர்களின் விகாரையே இருந்தது. அங்கு ஆய்வில் கிடைத்த அனைத்தும் பௌத்த பண்புகளையே கொண்டிருந்தன. இந்த கோவிலை கட்டுவதற்கு தமிழ் பௌத்தர்கள் நிதியுதவி செய்திருக்கலாம் என்று கூறியிருக்கிறார் மத்திய கலாச்சார நிதியத்தின் பணிப்பாளர் பேராசிரியர் காமினி அதிகாரி.

மேலும், குருந்தூர்மலை விகாரையை பாதுகாக்கும் உரிமை இலங்கை பௌத்தர்களுக்கும், இந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் சொந்தமானது. அவர்கள் அனைவரும் இந்த பணியில் சமமாக உதவ வேண்டும் - பங்கேற்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தொல்பொருளியல் தொடர்பான பிரச்சினைகள் குறித்து அரச தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடத்திய சிறப்பு ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சில காலத்திற்கு முன்பு தோண்டிய ஒரு பெரிய ஸ்தூபி, சிலை, துறவிகள் தங்குவதற்கான வீடுகள், போதி மரங்கள் போன்ற ஒரு புத்த கோவிலின் அனைத்து பண்புகளையும் கொண்ட இடமாக குருந்தூர் மலை கோயிலை அடையாளம் காண முடியும்.

குருந்தூர் மலை கோயில் மிக முக்கியமான இடம். அதை நாம் பாதுகாக்க வேண்டும். மற்ற இடங்கள் மிக முக்கியமானவை. இருப்பினும், இந்த இடத்திற்கு ஏற்பட்ட சேதம் 30



ஆண்டுகளுக்கும் மேலாக வளர்ந்த காடுகளால் கட்டடங்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள் அழிவடைந்துள்ளன. எனவே, அவை முறையாக அகற்றப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.

இந்த இடத்தில் உள்ள கல்வெட்டுகள் இன்னும் வெளியிடப்படவில்லை. இந்தக் கோயில் நாட்டின் பிற பெரிய அநுராதபுர கோயில்களுடன் இணைக்கப்பட்டிருந்தது என்பது அந்த கல்வெட்டுகளில் தெரிய வந்துள்ளது. இது பல பெரிய மன்னர்களின் உதவியுடன் அவ்வப்போது பாதுகாக்கப்பட்ட ஓர் இடம் என்பது மிகத் தெளிவாக உள்ளது. இந்த இடத்தை தோண்டி எடுப்பது மிகவும் முக்கியம்.

இந்த இடத்திற்குச் சென்ற போது, ?? இது தமிழ் குழுவோடு தொடர்புடைய கோயில் என்று ஏராளமானோர் நினைத்தனர். ஆனால், இந்த இடத்தில் ஒரு கோவில் தொடர்பான எதையும் நாங்கள் இன்னும் கண்டு பிடிக்கவில்லை.

பௌத்த தொல்பொருள்கள் மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளன.

பின்னர் தமிழ் மக்கள் இந்த இடத்திற்குச் சென்று தங்களின் திரிசூலத்தை அமைத்து வழிபட்டனர். நாம் நீண்ட இடங்களுக்கு அதை காணவில்லை. இது தற்காலிகமாக செய்யப்பட்டது என்பது தெளிவாகிறது. இது சற்றே துரதிர்ஷ்டவசமான நிலைமை.

இந்த பகுதிகளில் தமிழர்கள் வசித்து வந்தனர். கிறிஸ்தவத்திற்கு முந்தைய காலங்களிலிருந்து இந்த கோயில்களை உருவாக்குவதற்கு அக்கால தமிழ் மக்கள் அதிகபட்ச பங்களிப்பை வழங்கினர். முன்னைய கால தமிழ் மக்கள் இந்துக்கள் அல்லது பௌத்தர்களாக இருந்தனர் என்று தொல்பொருள் சான்றுகள் கூறுகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் பௌத்தர்கள் அவற்றின் கட்டுமானத்திற்கு நிதியுதவி செய்திருக்கலாம். இந்த கோயில்களில் வாழ்ந்த நூற்றுக்கணக்கான துறவிகளுக்கு அவர்கள் நான்கு பகுதிகளிலும் சேவை செய்திருக்கலாம் - என்றார். (ஐ)

# பருத்தித்துறை - கொழும்பு இரவு பஸ் சேவை ஆரம்பம்

வடமராட்சி, பெப். 06

பருத்தித்துறை - கொழும்பு இரவு பஸ் சேவை நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகும் என்று இ.போ.சவின் பருத்தித்துறை சாலை அறிவித்துள்ளது.

தினமும் இரவு 8 மணிக்கும் ஆரம்பமாகும் இந்த பஸ் சேவை நெல்லியடி, கொடிகாமம், வவுனியா, அநுராதபுரம், புத்தளம் வழித்தடம் ஊடாக கொழும்பு இரத்மலானையை சென்றடையும்.

கொழும்பு வெள்ளவத்தை புகையிரத நிலையத்திலிருந்து இரவு 8 மணிக்கு புறப்பட்டு கொழும்பு மத்திய பேருந்து நிலையத்தை அடையும். அங்கிருந்து இரவு 9 மணிக்கு புறப்பட்டு, இதே வழித்தடத்தில் பருத்தித்துறையை சென்றடையும்.

கடந்த வருடம் மார்ச் மாதம் கொரோனா தொற்று அச்சம் காரணமாக இந்த பஸ் சேவை நிறுத்தப்பட்டது. இந்நிலையில் கடந்த வாரம் முதல் பருத்தித்துறை - கொழும்பு பகல் பஸ் சேவை இடம்பெற்று வருகின்றது. இந்நிலையிலேயே நாளை இரவு பஸ் சேவை ஆரம்பமாகின்றது.

இதேவேளை, பருத்தித்துறை - கொழும்ப இரவு பஸ் சேவை முன்னர் இரு சேவைகளாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணம்

# போராட்டத்தில் பங்குபற்றிய வாள்வெட்டு சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், பெப். 06

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை சேர்ந்த சிறு குழுவினர் நடத்திய போராட்டத்தில் பங்கேற்ற வாள் வெட்டுக்குழுவை சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சுதந்திர தினமான நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் அந்தக் கட்சியின் சார்பில் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

இந்நிலையில், வாள் வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில், பொலிஸாரால் நீண்டகாலமாக தேடப்பட்டு வந்த இருவர், குறித்த பேரணியில் கலந்து கொண்டுள்ளனர் என்று யாழ்ப்பாணக் குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றது.

இதையடுத்து, அந்த இடத்துக்கு விரைந்த பொலிஸார், பேரணியில் கலந்துகொண்ட இருவரையும் கைதுசெய்வதற்கு முயற்சித்த போது, ஒருவர் தப்பி சென்றுள்ளார். இதையடுத்து, மற்றைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபரை யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை, பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# காத்தான்குடியின் 9 பகுதிகளை விடுவிப்பதற்கு நேற்று பரிந்துரை

மட்டக்களப்பு, பெப். 06

தனிமைப்படுத்தப்பட்டு முடக்கப்பட்ட காத்தான்குடி பிரதேசத்தில் உள்ள 9 கிராம உத்தியோகத்தர் பிரிவை விடுவிப்பதற்கு நேற்று வெள்ளிக்கிழமை பரிந்துரை செய்யப்பட்டதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் மருத்துவர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி காத்தான்குடி சுசுகாதார வைத்திய அதிகாரி பிரிவு சிவப்பு வலயமாக அடையாளப்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டு முடக்கப்பட்டது. இதன் பின்னர் இந்த பிரதேசத்தில் அன்ரிஜென் மற்றும் பி. சி. ஆர். பரிசோதனை செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு ஜனவரி 31ஆம் திகதி 8 கிராம உத்தியோகத்தர் பிரிவு விடுவிக்கப்பட்டன. தொடர்ந்து 10 கிராம உத்தியோகத்தர் பிரிவு முடக்கப்பட்டது.

இதனையடுத்து நேற்று கொரோனா தொற்று ஆபத்து தொடர்பாக மதீப்பீடு செய்யப்பட்டு ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவு தவிர்ந்த ஏனைய 9 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை விடுவிக்க சுகாதார திணைக்கள நாயகத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இதுவரை 243 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதுடன் இவர்களில் 217 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளதுடன் 23 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றதுடன் இதுவரை 3 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இந்தியாவிடம் பெற்ற நிதியை திருப்பி செலுத்தி விட்டோம்!

கொழும்பு, பெப். 06

இந்தியாவிடமிருந்து நாணய மாற்று முறை அடிப்படையில் கடந்த வருடம் பெற்றிருந்த 40 கோடி டொலர்களை மீளச் செலுத்தி விட்டதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இந்தியாவிடமிருந்து எவ்விதமான கோரிக்கையும் எழாத போதிலும், சில ஊடகங்கள் தவறான அறிக்கைகளை பிரசுரித்திருந்ததையடுத்து அதனை தெளிவுபடுத்தும் வகையில் இந்த அறிக்கையை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், எதிர்காலத்தில் தொடர்ந்தும் இவ்வாறான கடன்களை பெற்றுக் கொள்வது தொடர்பான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் வங்கி மேலும் அறிவித்திருந்தது.

இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு வழங்கப்பட்ட 40 கோடி டொலர்கள் கடனை மீளச் செலுத்துவதற்கு வழங்கியிருந்த கால எல்லையை நீடிப்பதற்கு இந்தியா தீர்மானிக்கவில்லை எனவும், கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையம் தொடர்பான உடன்படிக்கையை மீறியிருந்தமை காரணமாக, இந்த தீர்மானத்தை இந்தியா மேற்கொண்டிருந்ததாக இராஜதந்திர மூலங்களை மேற்கொள்காட்டி அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.



# பொத்துவில் - பொலிகண்டி பேரணி நாளையே நிறைவு!

யாழ்ப்பாணம், பெப். 06

பொத்துவில் முதல் பொலி கண்டி வரையான தொடர் போராட்ட பேரணி நாளை திங் கட்கிழமையே யாழ்ப்பாணத்தை வந்தடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் முதல் பொலி கண்டி வரையான தொடர் போராட்ட பேரணி, மூன்றாவது நாளான நேற்று முல்லைத்தீவை வந்தடைந்தது.

இந்நிலையில் இன்றைய தினம் போராட்டம் அங்கிருந்து புறப்படவுள்ளது. இதையடுத்து நாளைய தினமே பேரணி யாழ்ப்பாணம் வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர், இன்றைய தினம் பேரணியை யாழ்ப்பாணம் - பொலி கண்டியில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# யாழிலிருந்து போராட்ட களம் செல்கின்றன பேருந்துகள்

## விரும்புவோரை தொடர்பு கொள்ள முடியும்

யாழ்ப்பாணம், பெப். 06

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை பேரணியில் கலந்து கொள்ள விரும்புபவர்களுக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். நகரத்தில் இருந்து காலை 8.30 மணிக்கு ஒரு பேருந்து புறப்பட்டு, கிளிநொச்சி ஊடாக வவுனியாவை சென்றடையவுள்ளது.

நெல்லியடி நகரிலிருந்து இன்னொரு பேருந்து காலை 8.30 மணிக்கு புறப்பட்டு கொடிகாமம், கிளிநொச்சி ஊடாக வவுனியாவை சென்றடையவுள்ளது.

இந்த பேருந்துகளில் போராட்ட களத்திற்கு செல்ல விரும்புபவர்கள் மேலதிக தகவல்களிற்கு 077 272 7654 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

# உள்ளூர் கைத்தறி உற்பத்தியை ஊக்குவிக்க அமைச்சர் உறுதி!

உள்ளூர் கைத்தறி துணி உற்பத்தியை ஊக்குவிக்கும் முயற்சிகளை குடாநாட்டின் பல பிரதேசங்களிலும் முன்னெடுக்க நடவடிக்கை எடுக்குமாறு ஈழ மக்கள் ஜனநாயக கட்சி (ஈ.பி.டி.பி.) விடுதத கோரிக்கைக்கு இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர இணக்கம் தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு பிரதேசத்திற்கு நேற்று சென்ற இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, அங்கு தையல் பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெற்ற கைத்தறி உற்பத்திக்கான பொருட்களை 30 பெண்களுக்கு வழங்கி வைத்து 3 மாத பயிற்சி நெறியையும் ஆரமபித்து வைத்தார்.

இதன்போது, சுயதொழிலில் ஈடுபடக் கூடிய இளைஞர், யுவதிகளை இணைத்து அவர்களுக்கான பயிற்சிகளை வழங்கவும், அப்பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பற்றிக் கைத்தொழில் உற்பத்தியைப் போன்று யாழ். மாவட்டத்தில் ஏனைய பிரதேசங்களிலும் காணப்படும் குறித்த உள்ளூர் பற்றிக் உற்பத்தி நிலையங்களை அபிவிருத்தி செய்து தருமாறும் வேலணை பிரதேச சபையினர் கோரிக்கை விடுத்தனர்.

இந்தக் கோரிக்கையை ஏற்ற அமைச்சர் தயாசிறி ஜயரத்ன மக்கள் நலன் கருதிய யோசனைகள் ஒவ்வொன்றையும் இந்த அரசு குடாநாட்டு மக்களுக்காக செய்துகொடுக்க தயாராக உள்ளது - என்றார். (ஐ)

# போராட்டகளத்தில் நாம் நிச்சயம் கரம் சேர்ப்போம்

## மனோ கணேசன் எம்.பி. உறுதி



கொழும்பு, பெப். 06

“தமிழ் பேசும் இலங்கையர்களின் தேசிய இருப்பை அழித்தொழிக்கும் ராஜபக்ச அரசு, தமிழ் மொழியைப் பேசுகின்ற, இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க மதங்களைக் கடைபிடிக்கின்ற தமிழ், முஸ்லிம் மக்களை ஜனநாயக போராட்டங்களை நோக்கித் தள்ளிவிட்டுள்ளது.”

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

”நடப்பு ராஜபக்‌ஷ அரசின் “ஒரே நாடு, ஒரே சட்டம்“ என்ற என்ற கூச்சல் நடைமுறையில், “ஒரே மொழி, ஒரே மதம், ஒரே இனம்“ என்பதில் வந்து நிற்கின்றது. இதை நாம் இன்று தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளோம். இந்த ஏகபோக கொள்கையை நாம் ஒருபோதும் ஏற்க முடியாது. இதை இந்த நாட்டு அரசும், உலகமும் புரிந்து கொள்ள வேண்டும்.

உண்மையில் ஒளிவு மறைவு இல்லாமல் இதை இந்த அரசு செய்வதை எண்ணி நாம் மகிழத்தான் வேண்டும். உள்ளொன்று வைத்து புறமொன்று செய்யவில்லையே, இவர்கள்! இந்த நிலையில், அனைத்து ஜனநாயக சக்திகளையும் அணிதிரட்டி இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக, இந்த நாட்டில் எமது இருப்பை உறுதி செய்துகொள்ள நாம் போராட வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

நீண்டகாலமாக ஒத்திவைக்கப்பட்டிருந்த தேசிய ஜனநாயகப் போராட்டம் இப்போது ஆரம்பித்திருப்பதை எண்ணி மகிழ்கின்றேன். இந்த இலங்கை திருநாடு, “பன்மொழி, பன்மத, பல்லின“ அடிப்படையைக் கொண்ட பன்மைத்துவ நாடு என்ற இலக்கு அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும் வரை இந்தப் போராட்டம் தொடர வேண்டும்.

இந்த நாட்டின் வரலாற்றில் தமிழ் மக்களுக்கு இருக்கின்ற பங்கும், இன்றைய இலங்கை நாட்டின் ஆட்சி உரிமை, இறைமை ஆகியவற்றில் தமிழ் பேசும் மக்களுக்கு இருக்கின்ற மறுக்கப்பட முடியாத உரிமையும் உறுதிப்படுத்தப்படும்வரை இந்தப் போராட்டம் தொடர வேண்டும்.

தமிழ் பேசும் மக்களையும் உள்ளடக்கியதே இலங்கை நாடு என்ற அடிப்படை உண்மையை சிங்கள முற்போக்கு சிந்தனையாளர்கள் ஏற்றுக்கொண்டு கண் திறக்கும்வரை இந்தப் போராட்டம் தொடர வேண்டும்.

இதுவே ராஜபக்‌ஷ ஆட்சியின் “ஒரே நாடு, ஒரே சட்டம், ஒரே இனம், ஒரே மதம், ஒரே மொழி“ என்ற கொள்கைக்கு உரிய தர்க்கரீதியான அரசியல் பதிலாகும். இந்த ஜனநாயகப் போராட்டத்துக்கு எமது ஆதரவை நல்குகின்றோம். ஜனநாயக போராட்டக் களத்தில் நிச்சயமாக நாம் கரம் கோர்ப்போம்” - என்றுள்ளது.

# 27 பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலை

## வர்த்தக அமைச்சு நேற்று அறிவிப்பு



**கொழும்பு, பெப். 06**

**நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வரவுள்ள 27 அத்தியாவசிய பொருட்களின் கட்டுப்பாட்டு விலைகளை வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவித்துள்ளார்.**

**இந்த கட்டுப்பாட்டு விலைகள் நாளை மறுதினம் தொடக்கம் முதல் 3 மாத காலத்திற்கு செல்லுப்படியாகும் என்று வர்த்தக அமைச்சர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.**

இந்த பொருட்களை சதொச, கூட்டுறவு நிலையங்களில் கட்டுப்பாட்டு விலையின் கீழ் கொள்வனவு செய்ய முடியும் என அவர் அறிவித்துள்ளார்.

கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்ட பொருட்களின் விவரம்

சிவப்பு பச்சை அரிசி 1கி.கி. - 93 ரூபா, வெள்ளை பச்சை அரிசி 1கி.கி. - 93 ரூபா, வெள்ளை நாடு 1 கி.கி. 96 ரூபா, சம்பா 1கி.கி. 99 ரூபா, கீரி சம்பா 1 கி.கி. 125 ரூபா, கோதுமை மா 1 கி.கி. - 84 ரூபா, வெள்ளை சீனி 1 கி.கி. - 84 ரூபா, சிவப்பு சீனி 1 கி.கி. - 99 ரூபா, தேயிலை 100 கிராம் - 95 ரூபா, சிவப்பு பருப்பு (அவுஸ்திரேலியா) 1 கி.கி. 165 ரூபா.

பெரிய வெங்காயம் (இந்தியா) 1 கி.கி. - 120 ரூபா, உள்நாட்டு உருளைகிழங்கு 1 கி.கி. 180 ரூபா, பாகிஸ்தான் உருளைகிழங்கு 1 கி.கி. - 140 ரூபா, கடலை ஒரு கி.கி. 125 ரூபா, செத்தல் மிளகாய் 1 கி.கி. 495 ரூபா, ரின் மீன் 425 கிராம -220 ரூபா, இறக்குமதி செய்யப்படும் ரின் மீன் 425 கிராம் - 265 ரூபா.

நெத்தலி மீன் 1 கி.கி. - 545 ரூபா, தோலுடனான கோழி இறைச்சி 1 கி.கி. 400 ரூபா, கட்டி உப்பு 1 கி.கி. - 43 ரூபா, பால் மா 400கிராம் 355 ரூபா, சோயா எண்ணெய் 500 மி.லீ. - 310 ரூபா, சவர்க்காரம் (உடைகளுக்கானது) 115 கிராம் - 43 ரூபா, 650 கிராம 260 ரூபா, வாசனை சவற்காரம் 100 கிராம் (உடைகளுக்கானது) 115கிராம் - 56 ரூபா, கைகழுவும் திரவம் 100 மி.லீ. 250 ரூபா, முகக்கவசம் (எஸ்.எல்.எல் தரச்சான்றிதழ்) 14 ரூபா. (ஐ)

# பேரணியில் பங்கேற்றவர்களின் மோ.சைக்கிள் இலக்கங்கள் பதிவு

வவுனியா, பெப். 06



நெடுங்கேணி பிரதேசத்தில் போராட்டத்திற்கு ஆதரவளிப்பவர்களின் மோட்டார் சைக்கிள் இலக்கங்களை பொலிஸார் பதிவு செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை எழுச்சிப் பேரணி நேற்று மாலை நெடுங்கேணியை கடந்து சென்றது.

இதையொட்டி அந்தப் பகுதியால் நகரும் நகரும் பேரணிக்கு ஆதரவளிக்க பெருமளவான பொதுமக்கள் நெடுங்கேணி சந்தி மற்றும் அண்மித்த வீதியோரங்களில் குவிந்திருந்தனர்.

இவ்வாறு குவிந்த இளைஞர்கள் பலர் மோட்டார் சைக்கிள்களில் பேரணியில் பங்கேற்றனர்.

இவ்வாறு சென்ற இளைஞர்களின் மோட்டார் சைக்கிள் இலக்கங்களை அங்கு நின்ற பொலிஸார் பதிவு செய்தனர். அவர்களின் இந்தச் செயல், போராட்டத்துக்கு அச்சுறுத்தலை விடுப்பதை நோக்கமாகக் கொண்டது என்று போராட்டக்காரர்கள் கண்டனம் தெரிவித்தனர். (ஐ)

அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 16655\| வே \|1989<br>மானிப்பாய்\| இந்து<br>Accountant \|Australia<br>விசாகம்(துலாம்) \| 178செ.மீ | 14006\|வே\|1990<br>யாழ்நகரம்\| இந்து<br>optometrist\|Australia<br>மகம்(சிம்மம்) \| 158செ.மீ |
| 16772\|வே\|1987<br>சுந்தரோடை \|இந்து \| லக் : செவ்<br>Driver \|சதயம்(கும்பம்)<br>Sri Lanka \|168செ.மீ | 13948\| வே \|1991<br>புங்குடுதீவு\|இந்து \| Sri Lanka\|<br>N/A\|ஆய்யிலியம் (கடகம்)<br>162செ.மீ \| செவ் : 08 |
| 15883\|மு\|1976<br>Divorced\| மஸ்கெலியா\|இந்து<br>Coordinator \|Qatar<br>பூசம்(கடகம்) \|171செ.மீ | 13439\| வி \|1991<br>மாவிட்டபுரம்\| இந்து \|சைவம்<br>Finance Officer\|Sri Lanka<br>மூலம்(தனசு) \|170செ.மீ \|செவ் : 08 |
| 13291\|வே \|1987<br>சங்கானை\| இந்து \|சு.செவ் : 11<br>ICT Officer\|Sri Lanka \|<br>பூரட்டாதி(கும்பம்)\|170செ.மீ | 12950\|வே\|1991<br>யாழ்நகரம்\| இந்து \|<br>N/A\| France\|செவ் : 12<br>காரத்திகை(மேடம்)\|167செ.மீ |
| 13354\| வே \|1987<br>யாழ்நகரம்\|இந்து\|Sri Lanka\|<br>Credit Officer \| சு.செவ் : 03<br>மிருகசீரிடம்(மிதுனம்) \|175செ.மீ | 12860\| வே\|1991<br>யாழ்நகரம் \| இந்து \|செவ் : 12<br>Staff Assistant\|Sri lanka\|<br>விசாகம்(துலாம்) \|160செ.மீ |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை - நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : மைதானம் - வாராந்த விளையாட்டு நிகழ்வுகளின் தொகுப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம் - சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : வீக் என்ட் மூவி
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை



**இரவு**
7.00 மணி : சுப்பர் குறூப்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்




10.00 மணி : யாவரும் கேளீர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) வரலாறு
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) கணிதம்

**பகல்**
12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்

**இரவு**
7.00 மணி : க.பொ.த உயர்தரம் வணிகப்பிரிவு மாதிரி வினாத்தாள்

**ஓம் ரீவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : சின்மய சிந்தனை
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : யாழ்ப்பாணம் மிருசுவில் உசன் கந்தசுவாமி கோவில் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருகோணமலை கும்பத்துமால் கருமாரி அம்மன் ஆலயம் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்ப்பாணம் மிருசுவில் உசன் கந்தசுவாமி கோவில் திருவிழா

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித மிக்கேல் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : பாடல்
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
3.00 மணி : பாடல்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : இஸ்லாமிய உலகம் (மறு ஒளிபரப்பு)
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.02.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.